# தெளிவு

மாத இதழ்



ஹலால் கலவரம் பக்கம் – 9

ரிஷானா, சவுதி மன்னராட்சி, அமெரிக்கா பக்கம் 14



இதழ் 38 மார்ச் 2013 விலை 25.00

"THELIVU" MONTHLY TAMIL JOURNAL


# தீர்ந்தது 'ஹலால்' பிரச்சினை!

ஹலால் சான்றிதழ் வழங்கும் செயற்பாட்டை அரசாங்கம் பெறுப் பேற்று அனைத்து சமூகங்களும் ஏற்கும் விதமான ஒரு பொறிமுறையை மேற்கொள்ள வேண்டுமென 26.02.2013 பிற்பகல் கொழும்பு கொள்ளுப்பிட்டி ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்ற ஹலால் சான்றிதழ் விவகாரம் தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்தது. இதற்காக தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஹலால் சான்றிதழ் வழங்கும் செயற்பாட்டை இலங்கை அரசாங்கம் முன்மாதிரியாகக் கொண்டு செயற்படலாமெனவும் உலமா சபை தெரிவித்தது.

இனங்களுக்கிடையே பிரிவினையைத் தோற்றுவிக்கும் விதத்தில் ஹலால் சான்றிதழ் தொடர்பாக தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே தமது அமைப்பு, இந்த மாற்று யோசனையை முன்வைப்பதாக உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் எம்.ஐ.எம். ரிஸ்வி முப்தி தெரிவித்தார். முஸ்லிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சாதகமான தீர்வொன்றை அரசாங்கம் பெற்றுத் தருமென நம்புவதாகவும், தங்களது மாற்று யோசனை குறித்து ஜனாதிபதி நியமித்துள்ள அமைச்சரவை உபகுழுவுடன் பேசவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ALL CEYLON JAMIYYATHUL ULAMA
CERTIFIED
حلال
Halaal - Sri Lanka

ஹலால் சான்றிதழ் பெற்ற பொருட்களை முஸ்லிம் சமூகத்தவருக்கு மாத்திரம் வரையறுத்துக கொள்ளுமாறு சான்றிதழ் பெற்றுள்ள நிறுவனங்களை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி வேண்டுகோள் விடுத்தது. முஸ்லிம்கள் ஹலால் ஆனவற்றை மாத்திரம் உண்ண வேண்டும் என்பது மார்க்கக் கடமையாக

13ம் பக்கம்

## வர்த்தகப் பிரிவில் 3 ஏ சித்தி பெற்றவர்களில் ஆயிரக்கணக்கானோர் சிக்கலில்!



2012 ஆம் ஆண்டு வர்த்தக பிரிவில் 3 ஏ சித்தி பெற்றவர்களில் ஆயிரக்கணக்கானோர் பல்கலைகழக வாய்ப்பை இழக்கும் நிலை தோன்றியுள்ளதாக இளமையின் குரல் அமைப்பு எதிர்வு கூறியுள்ளது. மருதானை சீ.எஸ்.ஆர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவ்வமைப்பின் இணை ஏற்பாட்டாளர் கயான் ஜானக்க தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான கல்விப்பொது தராதர உயர்த்தரப்பரீட்சை பெறுபேறுகள் வெளியானதன் பின்னர் பல்கலைக்கழக கல்வித்துறையில் பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. வருடத்திற்கு சராசரியாக 3 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. அதில் 3 இலட்சத்து 35 ஆயிரம் பேர் பாடசாலைக்கு செல்கின்றனர். அவர்களில் 22 ஆயிரம் பேருக்கு மட்டுமே பல்கலைக்கழகங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கு அமைய 2012 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைக்கு 2 இலட்சத்து 36 ஆயிரத்து 474 பேர் தோற்றினர். அதில் 1 இலட்சத்து 44 ஆயிரத்து 445 பேர் சித்திபெற்று பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிப்பெற்றுள்ளனர். 2009 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைக்கு 2 இலட்சத்து 38 ஆயிரத்து 931 பேர் தோற்றினர். அவர்களில் 1இலட்சத்து 25 ஆயிரத்து 146 பேருக்கு பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிப்பெற்றனர். எனினும் 2008.'.2009 ஆம் கல்வியாண்டுக்கென 20 ஆயிரத்து 46 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டனர்.2010 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைக்கு 2 இலட்சத்து 65 ஆயிரத்து 388 பேர் தோற்றினர். அவர்களில் 1 இலட்சத்து 42 ஆயிரத்து 415 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிப்பெற்றனர். எனினும் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கென 22 ஆயிரத்து 16 பேர் மட்டுமே தெரிவ்செய்யப்பட்டனர். 2012 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைக்கு 2 இலட்சத்து 30 ஆயிரத்து 435 பேர் தோற்றினர். அவர்களில் 1 இலட்சத்து 44 ஆயிரத்து 445 பேர்பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிப்பெற்றனர். அதில் எத்தனை பேர் பல்கலைகழகங்களுக்கு செல்லமுடியும் என்பது தெரியாது.

13ம் பக்கம் பார்க்க

## ஜெனீவா செல்லும் இலங்கை குழுவிற்கு

## தலைவராக அமைச்சர் மஹிந்த சமரசிங்க




தற்போது நடை பெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா செல்லும் இலங்கைக் குழுவிற்கு தலைவராக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விஷேட பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க நியமிக்கப் பட்டுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் அமைச்சருடன் சட்டமா அதிபர் திணைக் களத்தின் பிரதான அதிகாரிகளும் இம்முறை ஜெனீவா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தொடரில் உரையாற்றவுள்ள மஹிந்த சமரசிங்க, கடந்த ஆண்டுக்குப் பின்னர் இலங்கை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தையும் எந்தளவுக்கு இப்போது நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்பதையும் விளக்கிக் கூறவுள்ளார். யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் விளக்கிக் கூறுவார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, இலங்கைக் குழுவினரைச் சந்திக்க விரும்பம் தெரிவித்திருப்பதால் அவருடனான ஒரு சந்திப்பும் இடம் பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடு திரும்பினார் சாவிஸ்!

கியூபா நாட்டில் இரண்டு மாதங்களாக, புற்று நோய்க்காக சிகிச்சை பெற்ற, வெனிசுலா ஜனாதிபதி, ஹுகோ சாவிஸ் 2013-02-18 தாயகம் திரும்பியுள்ளார்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலா நாட்டின் ஜனாதிபதியாக ஹுகோ சாவிஸ் 1998ம் ஆண்டு முதல் பதவி வகித்து வருகிறார். ஒடோபரில் நடந்த தேர்தலில் இவர் நான்காவது முறையாக ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார்.

குடல் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த சாவிஸுக்கு கடந்த ஆண்டு அறுவை சிகிச்சை நடந்தது. ஆனால் தற்போது அவருக்கு இடுப்பு பகுதியில் புற்றுநோய் பரவியதால் கியூபா சென்று சிகிச்சை பெற்றார்.

நான்காவது முறையாக தேர்தலில் வெற்றி பெற்ற சாவிஸ் இந்த முறை இதுவரை பதவி ஏற்காமல் உள்ளார். குறிப்பிட்ட காலத்தில் அவர் பதவி ஏற்காவிட்டால் மறு தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதை தவிர்ப்பதற்காக அவர் நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கியூபாவில் சாவிஸ் சிகிச்சை பெற்று வந்த காலத்தில் அவர் உடல் நிலை குறித்து ஏராளமான புரளிகள் பரவின. அவர் தாயகம் திரும்பியுள்ளதன் மூலம் இந்த சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது.

அவரது வருகையடுத்து மக்கள் அங்கு கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். பலர் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

# தனிநாடாகப் பிரிந்து செல்ல ஸ்காட்லாந்து நடவடிக்கை



பிரிட்டனுடன் இணைந்து ஒரு மாநிலமாக உள்ள ஸ்காட்லாந்து, எதிர்வரும் 2014 வசந்தகாலத்துக்குள் சுதந்திரமான தனி நாடாகப் பிரிந்து செல்வதற்கு திட்டமிட்டு தனது கோரிக்கைகளை வலுப்படுத்தி வருகின்றது.

மறுபக்கத்தில் சுதந்திரமான ஸ்காட்லாந்து எனும் கண்ணோட்டம் சர்வதேச சட்டத்தின் கீழான தனித்த மாநிலமாகவே கருதப்பட வேண்டும் என சட்டபூர்வமான கருத்து பிரிட்டன் அமைச்சர்களால் வெளியிடப்பட்ட ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது. மேலும் பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்வதற்காக மக்களின் கருத்தறியும் வாக்கெடுப்பை 2014 இல் ஸ்காட்லாந்து நடத்தவுள்ளது.

இந்நிலையில் ஸ்காட்லாந்தின் சுதந்திரக் கோரிக்கையை எதிர்க்கும் விதத்தில் பிரிட்டன் அரசு தயாரித்துள்ள ஆவணங்களின் முதற் பகுதி அண்மையில் வெளியிடப்பட்டது. இதனடிப்படையில் இரு சர்வதேச சட்ட நிபுணர்கள் பின்வரும் கருத்தைக் கூறியுள்ளனர்.


'அதாவது ஸ்காட்லாந்து தனி நாடானால் சர்வதேச நிறுவனங்களான ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றில் உறுப்பினராவதற்கு புதிய நாடு போல் விண்ணப்பிக்க நேரிடும் எனவும் இதை நிறைவேற்றுவது அதற்கு கடினமான காரியம்' என்பதாகும்.

இதேவேளை இங்கிலாந்துடன் வட அயர்லாந்து, வேல்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து தொடர்ந்து ஐக்கிய இராச்சியமாகவே (UK)இருக்கும் எனவும் இதனால் ஏற்கனவே தாம் அனுபவிக்கும் அந்தஸ்துக்கள், உரிமைகள் ஆகியவை இவற்றுக்கும் கிடைக்கும் எனவும் பிரிட்டன் சுட்டிக் காட்டியுள்ளது

# சவூதியில் அமெரிக்காவின் இரகசிய ஆளில்லா விமான தளம்!

அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. சவூதி அரேபியாவில் ஆளில்லா விமான தளமொன்றை இரகசியமாக இயக்கி வருகிறது என்ற பரபரப்பு தகவல் தற்போது வெளியாகியுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக இயங்கி வரும் இந்த விமான நிலையத்தில் இருந்து பறந்து சென்ற விமானத்தின் உதவியுடனேயே, அல் கொய்தா இயக்கத்தின் தாக்குதல்களுக்கு திட்டம் வகுத்த அன்வர் அல்-அவ்லாகி கடந்த 2011 செப்டம்பர் மாதம் கொல்லப்பட்டார் என்பதும் தெரிய வந்துள்ளது.

மேலும் தலிபான்களின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதே இத் தளம் இயக்கப்படுவதற்கான பிரதான காரணமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக யேமனில் இயங்கி வரும் அல் கொய்தா இயக்க இலக்குகளை அழித்தலே இதன் பிரதான நோக்கமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



கடந்த 1991-ம் ஆண்டு நடைபெற்ற வளைகுடா போரில் பங்கேற்க சவூதி அரேபியாவிற்கு சென்ற சுமார் 10 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் 2003ம் ஆண்டு அந்நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

தற்போது அங்கே அமெரிக்க இராணுவ பயிற்சி மையம் மட்டுமே அதிகாரபூர்வமாக இயங்கி வருகிறது. இந்த தகவல் அமெரிக்க ஊடகங்களுக்கு 2011ம் ஆண்டின் போதே தெரிந்திருந்தும், அவை இது பற்றிய செய்திகளை வெளியிடவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான ஆலோசகரான ஜோன் பிரன்னன் இத்தளத்தை நிர்மாணிக்கும் பொருட்டு சவுதி அரேபிய அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர் என்பதும் தெரியவந்துள்ளது.





# சவூதி அரேபிய இளவரசி புகைப்(பிடிக்கும்)படம்

## ரூ.25 கோடி மிரட்டல்

சவுதி அரேபியாவின் இளவரசி பஸ்மா பின்ட் சவுத் பின் அப்துல்லா ஷிஷ் இல் சவுத், அந்நாட்டின் மனித உரிமை பிரசாரகராகவும் உள்ள அவர் தற்போது பிரிட்டனில் உள்ள மேற்கு லண்டனில் தங்கியுள்ளார்.

இந்நிலையில் அவரது அதிர்ச்சி தரும் புகைப்படம் ஒன்று இணைய தளத்தில் வெளியானது. அதில் 48 வயதான அவர் மாடர்ன் உடையில் இருந்தபடி சிகரெட் பிடித்தபடி உள்ளார்.

இதை 5 குழந்தைகளின் தாயான அவர் தனது தோழியின் மடிக்கணனியில் பதிவு செய்து வைத்திருந்தார். அதை கணனியில் புகுந்து தகவல்களை திருடும் ஒரு நபர் அந்த புகைப்படத்தை பதிவு செய்து விட்டார்.

இதை இணையதளங்களில் வெளியிடாமல் இருக்க ரூ.25 கோடி கேட்டு மிரட்டி வந்துள்ளார். ஏனெனில் சவுதி அரேபிய கலாசாரத்துக்கெதிராக அந்த புகைப்படம் இருந்ததுதான் காரணம்.

இந்நிலையில், திடீரென அந்த புகைப்படத்தை அந்நபர் வெளியிட்டார். இதனால், இளவரசி பஸ்மாவுக்கும், அவரது அரச குடும்பத்துக்கும் இடையிலான உறவில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாப்பரசர் 16ம் ஆசிர்வாதப்பரை ரோமிலிருந்து வெளியேற்ற சதி?
## பதவிக்கான பனிப்போர் ஆரம்பம்!

பாப்பரசர் 16ம் ஆசிர்வாதப்பரை ரோமிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் மறைமுகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

உடல் நிலையைக் கருத்தில் கொண்டு இம்மாதம் 28 ஆம் திகதி பதவிவிலகுவதாக 85 வயதான பாப்பரசர் 16ம் ஆசிர்வாதப்பர் இரு தினங்களுக்கு முன்னர் அறிவித்தார்.

இதன் பின்னர் அவர் வத்திக்கானிலேயே தங்கியிருப்பார் என்ற தகவலும் வெளியாகியது. எனினும் அவரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான மறைமுக நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக கத்தோலிக உயர் பீடத்திலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.





பதவி விலகிய பாப்பரசர் ஒருவர் அங்கே தங்கியிருந்தால் புதிதாக அப்பதவிக்கு தெரிவுசெய்யப்படும் ஒருவரால் அவரது கடமைகளை சுயாதீனமாக மேற்கொள்வதிலோ, தீர்மானங்களை எடுப்பதிலோ சிக்கல்கள் தோன்றும் என கார்தினால்களில் ஒரு சாரார் கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனைக்கருத்தில் கொண்டே பாப்பரசர் 16ம் ஆசிர்வாதப்பரை அவர் பதவிவிலகிய உடன் வெளியேற்றுவதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


தற்போது அங்கு பாப்பரசர் பதவிக்கான போட்டி சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளதாகவும், பதவியை பெறுவதற்கான பனிப்போர் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த பாப்பரசரை தேர்வுசெய்யும் பொருட்டு 117 கார்தினால்கள் அடுத்த மாதம் கூடவுள்ளனர். இந்நிலையில் அடுத்த பாப்பரசராக யார் நியமிக்கப்படுவார் என்பது தொடர்பில் சூடான விவாதங்கள் தற்போது ஆரம்பித்துள்ளன. இம்முறை பாப்பரசராக கறுப்பினத்தவரொருவர் நியமிக்கப்படலாம் என ஊகம் வெளியிடப்பட்டுள்ளது. கானா நாட்டைச் சேர்ந்த கார்தினல் பீட்டர் டேர்க்ஸன் அல்லது கிழக்கு நைஜீரியாவின் பிரான்சிஸ் அரின்சே ஆகிய இருவரில் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. எனினும் கறுப்பின பாப்பரசரொருவரை நியமிப்பது இனவெறிக் கருத்துக்கள் பரம்பிக்கிடக்கும் கிழக்கு ஐரோப்பாவில் அவ்வளவு இலகுவானதொரு காரியமல்லவென சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட இருவரைத் தவிர சான் போலோவின் கார்தினல் ஒடிலோ சிரேரர், பிரான்ஸ்– கனேடிய கார்தினல் மார்க் ஹவுலெட், இத்தாலிய– ஆர்ஜன்டினரான லியனார்டோ சண்ரி ஆகிய மூவரில் ஒருவர் நியமிக்கப்படவும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஐரோப்பியர் அல்லாத ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படுதல் சற்று கடினமானதாகவே கருதப்படுகின்றது.

பாப்பரசர் பதவியை 1523ஆம் ஆண்டின் பின்னர் இத்தாலியர் அல்லாத போலந்து நாட்டின் ஜோன் போன் ஜஜ மற்றும் பதவிவிலகவுள்ள ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த பாப்பரசர் 16ம் ஆசிர்வாதப்பர் ஆகிய இரண்டு பேர் மட்டுமே இதுவரை வகித்துள்ளனர். எனவே இம்முறை இத்தாலியைச் சேர்ந்த ஒருவருக்கு அப்பதவி வழங்கப்படவேண்டுமென ஒருசாரார் கடுமையாக வாதிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இம்முறை அப்பதவி வளர்ந்து வரும் நாடொன்றைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கபடவேண்டுமென்ற வலுவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.


குறிப்பாக கத்தோலிக்க சமயத்தை பெரும்பான்மையாகக் கொண்ட லத்தீன் அமெரிக்க அல்லது அச்சமயம் வேகமாக வளர்ந்துவரும் ஆப்பிரிக்க கண்ட நாடொன்றைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## அச்சுறுத்தலுக்கும் அழுத்தங்களுக்கும் அடிபணிந்து அமெரிக்காவுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை

"நான் ஒரு ராஜதந்திரி அல்ல. நான் நியாயமாகவும் நேர்மையாகவும் நேருக்நேர் பேசக்கூடிய ஒரு புரட்சியாளன். பேச்சுவார்த்தையொன்றுக்கு அழைப்பு விடுக்கும் ஒருவர் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும்போதுதான் அது செயலுருப்பெறும்." என இஸ்லாமிய புரட்சித் தலைவர் ஆயத்துல்லா அலி காமெனெயி ஈரானிய விமானப்படை அதிகாரிகளுடனான சந்திப்பொன்றில் கூறினார்.

நல்லெண்ணத்துடனும் சரிசமனான நிபந்தனைகளுடனும் ஒருவருக்கொருவர் கபடநோக்கமின்றியும் இருசாராரும் பேசும்போதுதான் பேச்சுவார்த்தை



அர்த்தமுள்ளதாக அமையும். பேச்சுவார்த்தைக்காக பேச்சுவார்த்தை, தந்திரமான பேச்சுவார்த்தை மற்றும் வல்லரசுகளின் செய்கைகளை உலகுக்குக் காட்டும் நோக்கிலான பேச்சுவார்த்தை அழைப்பு எல்லாம் கபட நோக்குடையவையே.

கடந்த நான்கு வருடங்களாக அமெரிக்கா ஈரானிய விஞ்ஞானிகளைப் படுகொலை செய்தவர்களுக்கு ஆதரவளித்ததும் துரோகிகளுக்கு உடந்தையாக இருந்ததும் அவர்களது சதித்திட்டங்களைத் தொடர்ந்தனரேயன்றி வேறென்றும் செய்யவில்லை.

நீங்கள் துப்பாக்கியை நீட்டியவண்ணம் பேச்சுவார்த்தையா அல்லது துப்பாக்கி குண்டா? என்று கேட்கிறீர்கள். அழுத்தங்களும் பேச்சுவார்தைகளும் இணைந்து செல்ல முடியாது என்பதையும் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கெல்லாம் ஈரான் ஒருபோதும் அடிபணியாது என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வது அவசியம்.

"பந்து இப்போது ஈரானின் பக்கமே உள்ளது" என்ற அமெரிக்க அதிகாரிகளின் கூற்றைப் பற்றி புரட்சித் தலைவர் ஆயத்துல்லா அலி காமெனெயி குறிப்பிடுகையில், "பந்து இப்போது உங்கள் பக்கமே உள்ளது. ஏனெனில், பேச்சுவார்த்தை என்று பேசிக்கொண்டு அச்சுறுத்தலையும் அழுத்தங்களையும் தொடரந்து பிரயோகிப்பதால் என்ன பலன் விளையப்போகிறது? என்ற கேள்விக்கு நீங்கள்தான் பதிலளிக்க வேண்டும்" என்றார்.

"எவ்வாறாயினும் அவர்களது பேச்சுவார்த்தைக்கான தேவையின் காரணத்தை நாம் அறிவோம். தோல்வியைத் தழுவியுள்ள மத்திய கிழக்கு கொள்கையினை ஈடு செய்யும் ஒரு துருப்பு சீட்டே இந்த பேச்சுவார்தததை நாடகம். அவர்கள் எவ்வளவுதான் தமது நல்லெண்ணத்தை உலகுக்கு காட்ட முனைந்தாலும் அவர்களிடம் எந்த நல்லெண்ணமும் கிடையாது என்பதை அனைவரும் அறிவர்" எனவும் தலைவர் கோடிட்டுக் காட்டினார்.

அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதால் எந்த ஒரு பிரச்சினையும் தீரப்போவதில்லை. ஏனெனில் கடந்த 60 வருடங்களாக எந்தவித வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. அவர்களது சதித்திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், பொருளாதரத் தடைகள், இராணுவ அத்துமீறல்கள், மேற்கத்திய ஊடக சாம்ராஜ்யங்கள் மூலம் விடுக்கப்படும் தீவிர அச்சுறுத்தல்கள் மற்றும் ஆக்கிரமிப்பு எதிரிகளுக்கான உதவிகள் என்பவற்றின் மூலம் இஸ்லாமியக் குடியரசைப் பலவீனப்படுத்த முயன்றாலும் இறுதியில் அவர்களே பலவீனமடைய நேர்ந்தது.

அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்காக யாராவது நாட்டின் தேசிய நலன், இறைமை மற்றும் முன்னேற்றம் என்பவற்றுக்கு எதிராக செயல்பட முனைந்தால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

ஜெர்மனியில் நடைபெற்ற 49வது வருடாந்த மியூனிச் பாதுகாப்பு மாநாட்டில் அமெரிக்க உதவி ஜனாதிபதி ஜோ பிடன் பேசும்போது ஈரானின் அணு விவகாரம் குறித்து நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த வாஷிங்டன் தயாராகவே உள்ளது எனக் குறிப்பிட்டார்.

அமெரிக்கா, இஸ்ரவேல் மற்றும் அதன் தோழமை நாடுகள் ஈரானின் அணு வலுத் திட்டத்தில் இராணுவ நோக்கங்கள் உள்ளதாக தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருகின்றன.

ஆனால் ஈரான், அணு ஆயுதப் பரவலாக்கல் தடை ஒப்பந்ததில் கையெழுத்திட்டிருப்பதாலும் சர்வதேச அணு சக்தி ஏஜன்ஸி உறுப்பு நாடாக் இருப்பதாலும் சமாதான தேவைகளுக்காக அணு வலுத் தொழில் நுட்பத்தைப் பெற்றுக் கொள்ளவும் அதனை அபிவிருத்தி செய்துகொள்ளவும் எல்லா உரிமைகளையும் பெற்றுள்ளது என்பதே ஈரானின் வாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
மாத இதழ்

THELIVU
38, Moor Road,
Dehiwela
TP : 0112712845
Email: thelivu009@gmail.com


# சிந்தித்து செயல்படுவோம்!

ஆயிரம் வருடங்களுக்கு மேலாக இந்நாட்டின் பெரும்பான்மை சமூகத்தவர்களுடன் இன்று வரை அன்னியோன்யமாக வாழ்ந்து வரும் நாம், இந்நாட்டின் சுபீட்சத்திற்காகவும் இறைமைக்காகவும் அளப்பரிய சேவைகளையும் உழைப்பையும் வழங்கியுள்ளதோடு உதிரத்தையும் வியர்வையும் சிந்தி, உடன் பிறப்புகளைத் துறந்து சொத்துகளையும் காணி நிலங்களையும் இழந்து பல்வேறு துன்ப, துயரங்களை சந்தித்து, இந்நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து பிரிவினைவாதத்தைத் தோற்கடிக்க உதவியுள்ளோம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் அண்மைக் காலமாக இந்நாட்டின் நிகழ்வுகளைக் கூர்ந்து அவதானிக்கும் போது இந்நாட்டு முஸ்லிம்களை இந்நாட்டுக் குள்ளேயே அந்நியப்படுத்தும் ஒரு நிகழ்ச்சி நிரல் மிக நேர்த்தியாகத் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில், நமது எதிர் நடவடிக்கை எதுவாக இருக்கவேண்டும் என்பதை மிக ஆழமாகச் சிந்தித்து மிகவும் சமயோசிதமாகவும் நிதானமாகவும் ஒரு மூலோபாயத்தை வகுக்க வேண்டும். அத்துடன், இதுகால வரை எம்மிடையே நிலவி வந்த குறுகிய வேறுபாடுகளை மறந்து நாம் ஒன்றுபட்டு மிக நிதானத்துடன் எதிர்காலத்தை அணுக வேண்டியதும் இன்றியமையாததாக உள்ளது.

அதேநேரம், நாம் நம்மை மட்டும் நல்லவர்களாகவும் தூயவர் களாகவும் கருதிக்கொண்டு ஏனையவர்கள்தான் எம்மீது அவதூறுகளையும் அபாண்டங்களையும் சுமத்துகின்றனர் என்ற எண்ணத்தை மாற்றி நாம் நம்மை ஒரு சுய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதாவது, நாம் உணவுப் பொருட்களில் மட்டுமன்றி ஏனைய எல்லா விடயங்களிலும் ஹலால், ஹராம் என்பவற்றைச் சரியாகப் பேணி நடக்கின்றோமா? என்பதை சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம். இது நம்மை நாம் தூய்மைப் படுத்திக்கொள்வதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதி செயல்படவேண்டும். எனவே, ஏனைய சமூகத்தவர்களை ஆத்திரமடையச் செய்யும், பொறாமை கொள்ளச் செய்யும் அல்லது வெறுப்படையச் செய்யும் எமது செயற்பாடுகளை மாற்றியமைத்து எமக்குள்ளேயே சில ஒழுக்க நெறி முறைகளை நாம் வகுத்து ஒரு உண்மை முஸ்லிமாக வாழ்ந்து காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அவர்கள் எம்மீது சுமத்தும் பல குற்றச்சாட்டுகள் எமக்குத் தலைகுனிவை ஏற்படுத்துபவை என்பதை நாம் விளக்கிக் கூறவேண்டிய அவசியமில்லை. நம்மை நாம் திருத்திக் கொள்ள முன்வந்தால் பாதிப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

எம்மை இலக்கு வைத்துள்ள இந்தப் புதிய இயக்கத்தின் பின்னால் யார் இருக்கிறார்கள்? என்றோ அதன் நோக்கம் என்ன? என்பது பற்றியோ ஆராய்வதில் எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை. ஆனால் மதத்தின் பேரால் நடைபெறும் இந்த பாசிச அலையின் விளைவுகளைப் புத்தியுள்ள ஒருவனால் இலகுவாக ஊகிக்க முடியும். ஏனெனில் அண்மைக் காலங்களில் அந்த அளவு அனுபவத்தை மக்கள் பெற்றுள்ளனர். இன்று மக்களை ஏமாற்றி வயிறுவளர்க்க இரண்டு ஆயுதங்கள் கையிலெடுக்கப்படுகின்றன. ஒன்று மதம், மற்றது அரசியல். ஸ்ரீலங்காவில் இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளுக்கான எந்த அறிகுறியும் இல்லாத ஒரு நிலையிலேயே, சிங்கள பௌத்த தீவிரவாத எழுச்சி இடம்பெற்று வருகிறது. இந்த விடயம் எங்களுடைய துயரங்களுக்கெல்லாம் காரணம் எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதம் அல்ல சிங்களத்தின் தீவிரவாதமே எனவும் அதுவே எல்.ரீ.ரீ.ஈ.யின் பயங்கரவாதத்துக்குக் காரணமாக இருந்தது என்ற உலக அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்துவிடும். தமிழ் புலம் பெயர்ந்தவர்களின் பிரிவினைவாதக் குழுக்கள் இவற்றைச் சுட்டிக்காட்டி, இதுதான் எங்களுக்கும் நடந்தது, இதுதான் எங்களுக்கும் செய்யப்பட்டது, தமிழ் பிரிவினை வாதத்துக்கு எதிரான போரில் அரசாங்கத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம்களுக்கும் இதனையே அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள், என்று பிரசாரம் செய்வார்கள். இதெல்லாம் ஜெனீவாவில் அரசாங்கத்தின் நிலையையும் பலவீனப்படுத்திவிடும் என்பதோடு நாட்டுக்குக் கெட்ட பெயரையும் நிரந்தரமாக்கிவிடும். எனவே அரசாங்கம் இதில் தலையிட்டு நியாயமான தீர்வை வழங்கவேண்டியது காலத்தின் தேவையாகும். இல்லையெனில் நாம் பாடுபட்டுப் பெற்ற சுதந்திரம் பலனில்லாமல் போய்விடும்.




# மாலியில் நடப்பது யுரேனியப் போர்!

உள்நாட்டுப் போர் "ஏற்படும்" அல்லது "ஏற்படுத்தப்படும்" நாடுகள் தொடர்பாக, மேற்கத்திய நாடுகள் எடுக்கும் நிலைப்பாடு முழுவதும் அவர்களுக்குச் சாதகமானதாகவே இருக்கும் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது. மேற்காசிய நாடான சிரியாவில் அரசுக்கு எதிரான புரட்சியாளர்கள் படைக்கு ஆதரவாக ஆயதங்களுடன் களமிறங்கியுள்ள அதே நாடுகள்தான், மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியில் புரட்சியாளர்களுக்கு எதிராகவும் அரசுக்கு ஆதரவாகவும் போரில் ஈடுபட்டுள்ளன.

மாலியில், "ஆபரேஷன் செர்வல்" என்ற பெயரில் போர் நடத்தி வருகிறது பிரான்ஸ். மாலி முன்பு பிரான்ஸ் நாட்டின் காலனி ஆதிக்கத்துக்கு உள்பட்டிருந்தது என்பதால், அங்கு பிரசசினை ஏற்பட்டால் ராணுவ நடவடிக்கை எடுக்க அந்நாட்டுக்குக் கூடுதல் உரிமை உண்டு என்று நியாயம் கற்பித்துக் கொண்டுள்ளனர். பிரான்ஸின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, டென்மார்க், ஸ்பெயின், ஸ்வீடன் என ஐரோப்பிய நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ளன. மாலியின் வட பகுதியில் வலுவாக உள்ள "அசாவத" தேசிய விடுதலை இயக்கம் உள்ளிட்ட போராளிகள் குழுக்களுக்கு எதிரானது இப்போதைய போர். "அசாவத்" பகுதியைத் தனிநாடாக அறிவித்து, இடைக்கால அரசு அமைக்கும் அளவுக்கு மக்களிடையே செல்வாக்கு பெற்றது அந்த அமைப்பு.

மக்கள் தொகையில் 90 சதவீதம் இஸ்லாமியர்கள் உள்ள மாலியில், "அல்-காய்தா" உள்ளிட்ட பயங்கரவாதிகளுடன் இணைந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக அசாவத் அமைப்பு 'போரில் ஈடுபட்டுள்ளதாக அந்நாட்டு மத்திய அரசு குற்றம் சாட்டியது. இந்தப் பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்காகவே காத்திருந்த மேற்கத்திய நாடுகள் உடனடியாகச் செயலில் இறங்கின. தாங்கள் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் அல்ல, மக்கள் ஆதரவு பெற்ற அமைப்பு என்று அசாவத் தேசிய விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது. எனினும் அந்த அமைப்புக்கு லிபியாவின் மம்மர் கடாபியுடன் இருந்த தொடர்பு, அசாவத் பகுதியில் அமுலில் உள்ள தீவிரமான இஸ்லாமியச் சட்டங்கள் போன்றவை அவர்களுக்கு எதிராக உள்ளன.

மாலியின் தேசிய அரசுக்கு உடனடியாக ஆதரவுக்கரம் நீட்டிய பிரான்ஸ், படைகளுடன் மாலியில் வந்து இறங்கி போர் நடத்தி வருகிறது. பிரான்ஸின் நவீனகால காலனி ஆக்கிரமிப்பு என்று வர்ணிக்கப்படும் இந்தப் போரின் முக்கிய நோக்கம் பயங்கரவாத ஒழிப்பு அல்ல, மாலியின் வடபகுதியில் பெருமளவில் புதைந்து கிடக்கும் "யுரேனியம்" தான்.

தொடங்கிய உடனேயே முடிந்துவிடும் பெருநகரத்து வாடகை வீடு போன்ற சிறிய அளவிலான மாலியின் வடபகுதியில் இன்னமும் அகழப்படாத எண்ணெய் வளமும், அதைவிட அதிகமாகப் புதைந்து கிடக்கும் யுரேனியத்தையும் அபகரிக்கவே பிரான்ஸ் புகுந்துள்ளதே தவிர அந்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், பயங்கரவாதத்தை வேரறுப்பதற்காகவும் அல்ல என்பதைக் காலம் உணர்த்தும்.

பிரான்ஸ் நாட்டின் மின் தேவையில் பெருமளவில் அணுமின் சக்தி மூலமே நிறைவு செய்யப்படுகிறது. இதற்காக மாலியில் கிடைக்கும் யுரேனியத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம், எண்ணெய் வளத்தைப் பங்குபிரித்துக் கொள்ளலாம் என்பதே படை நடத்துவதின் உண்மையான நோக்கம்.

இராணுவம் புகுமிடமெல்லாம் பெரும் உயிரிழப்புகள், மனித உரிமை மீறல்களும் ஏற்படும் என்பதற்கு மாலியும் விதிவிலக்கு அல்ல. ராணுவ நடவடிக்கை தொடங்கிய கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். சில லட்சம் பேர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

துரத்தியடிக்கப்பட்ட புரட்சியாளர்கள் கொரில்லா யுத்தத்தைக் கையில் எடுத்துள்ளனர். இனி அவர்களை அடக்குவதற்காக தங்கள் ராணுவத்தை அங்கு நிலை நிறுத்துவது குறித்து பிரான்ஸ் யோசித்து வருகிறது. இதன் மூலம் மேற்கு ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியின்மைக்கு அச்சாரமிடப்பட்டுள்ளது.

எங்கள் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கை என்ற பெயரில் ஆப்கானிஸ்தானில் மேற்கொண்டுவரும் போரை அமெரிக்கா நியாயப்படுத்தியுள்ளது. ஆனால், மாலி மீது மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்த பிரான்ஸ"க்கு வலுவான காரணங்கள் அமையவில்லை.

உலக வரைபடத்தை விரித்து வைத்து, பயங்கரவாதத்துக்கு இலக்காகாத, உள்நாட்டுப் போர் இல்லாத, பிற நாடுகளின் தாக்குதல்களுக்கு இலக்காகாத நாடுகள் உள்ளனவா என்று தேடினால் அவை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் கூட இல்லை.

ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்த முற்படும்போதுதான் உறவுகள் கசந்துவிடுகின்றன, பகைமையுணர்வு ஏற்படுகிறது என்பது தனிநபர்களுக்கு மட்டுமானதல்ல, ஒவ்வொரு இனக் குழுவுக்கும், மதத்துக்கும், நாடுகளுக்கும் பொருந்தும். அனைத்துத் தரப்பினருமே ஆதிக்க மனோபாவத்தையும், பகையுணர்வையும் துறந்து, ஆயுதங்களைக் கைவிட்டால்தான் அமைதியின்மை அதிகரித்து வரும் நாடுகளின் எண்ணிக்கை ஓரளவுக்காவது குறையும்.

நன்றி: தினமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சூழலில் அடிக்கடி உச்சரிக்கப்படும் "சிங்கள பௌத்தர்" எனும் சொல்லைக் கேட்கும் ஒவ்வொரு முறையும், என்னால் ஏதும் செய்ய முடியாவிட்டாலும், ஒரு கெடுதலுக்கான அபாய அறிவிப்பைக் கேட்பது போன்ற ஒருவகையான அச்ச உணர்வு என்னை வாட்டி வதைப்பதை என்னால் உணரமுடிகிறது. என்னைப் பொறுத்தவரை வெடிப்பதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் வெடிகுண்டைப் போலவே அது என்னுள் ஒலிக்கிறது. நான் ஒரு சிங்களவர் மற்றும் ஒரு பௌத்தர் என்ற ரீதியில் இந்தப் பூமியில் "சிங்கள பௌத்தம்" என்றால் என்ன? என்று கேட்பதற்கு எனக்கு எல்லா உரிமையும் உள்ளது. அது சிங்கள இனத்தின் ஒருபிரிவா? ஸ்ரீலங்காவில் பௌத்த கொடியின் கீழ் வரும் மற்றொரு தேசிய இனமா? எனக்கு குழப்பமாகவே உள்ளது.

இன்று, குறுகிய நோக்கம் கொண்ட சுயநலவாத அரசியல்வாதிகள் நம்மையெல்லாம் பல ஆண்டுகளாகச் செயலிழந்த ஆய்வுகூட எலிகளாகப் பாவிக்கும் ஒரு நாடாகவன்றி இங்கு வேறு எதனையும் காண முடியவில்லை. அவர்களுடைய அரசியல் ஆய்வுகூடத்தில் பல்வேறு சமூகவியல் சார்ந்த விஷக் கிருமிகளைப் பல தலைமுறைகளாக

நாடு ஏனையோர் பின்பற்றுவதற்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்த காலம். நல்லவேளை, அவர்கள் இன்றை ஸ்ரீலங்காவை உதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. இன்று அவர்கள் எங்கே இருக்கிறார்கள், நாம் எங்கே இருக்கிறோம், என்பதை எண்ணிப்பாருங்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றாகவே நடந்தது, நமக்கு எல்லாமே தலைகீழாகப் போய்விட்டது.

எனது இனிய பாடசாலை நாட்கள் என் நினைவை நெருடுகிறது. அப்போது எமக்கெல்லாம் இனக்குழு என்றால் என்னவென்றே தெரியாது. நாங்கள் அனைவருமே இலங்கையர் என்ற ரீதியல் ஒரே

> "லீ குவான் யு ஒரு காலத்தில் சிங்கப்பூர் ஸ்ரீலங்காவைப் போலிருக்கவேண்டும் என விரும்பினார். அந்த பொற்காலத்தை நினைத்துப் பாருங்கள். அன்று எமது நாடு ஏனையோர் பின்பற்றுவதற்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்த காலம். நல்லவேளை, அவர்கள் இன்றை ஸ்ரீலங்காவை உதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. இன்று அவர்கள் எங்கே இருக்கிறார்கள், நாம் எங்கே இருக்கிறோம், என்பதை எண்ணிப்பாருங்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றாகவே நடந்தது, நமக்கு எல்லாமே தலைகீழாகப் போய்விட்டது"

இனக்குழுவைச் சேர்ந்த, தெற்கத்திய மற்றும் கண்டிய இனக் கலப்புடனான ஒரு இலங்கையர். மதத்தால் பௌத்தமதத்தைச் சார்ந்தவள், எனது முதல் மொழி ஆங்கிலமாக இருப்பதால் பறங்கியர் அல்லது ஒரு வட இந்தியர் என்றுகூட யாரும் கருதலாம். ஆகவே இந்த நிலையில், வட இந்திய தோற்றத்துடனான ஆங்கிலம் பேசும் கலப்பினச் சிங்கள பௌத்தர் என்று என்னை அடையாளப் படுத்திக்கொள்வதா? நன்றி, அப்படி வேண்டவே வேண்டாம். என்னை ஒரு இலங்கையர் என்று அழைப்பதையே நான் விரும்புகிறேன், ஏனெனில் அது எனது மனச்சாட்சிக்கு உகந்ததாகவும் நாவுக்கு நல்லதாகவும் நான் உணர்கிறேன். இன்று பலர் தமது அடையாளத்தையிட்டு மனக்குழப்பம் அடைந்துள்ளனர். அனேகர் தமது உத்தியோகபூர்வ ஆவணங்களில் தேசியத்துக்குப் பதிலாகத் தமது இனத்தைக் குறிப்பிடுகின்றனர். அதுவே அவர்களின் மனக்குழப்பம்.

நான் சொல்லக்கூடியது என்னவென்றால் யாராவது ஒருவர் மூளையில் ஒரு உதிப்பு ஏற்பட்டு தனது "சாதி"யையும் அதில் குறிப்பிடுவதற்கு முன்னால், எங்கள் இனத்தையும் மதத்தையும் குறிப்பிட்டு ஒரு புதிய அடையாள அட்டை வழங்கப்படாவிட்டால், உண்மையில், நாங்கள் யார் என்பதைக்

# ஸ்ரீலங்காவின் அரசியல் ஆய்வு கூட எலிகள்

நம்மீது ஏற்றி, அதன் நீண்டகாலப் பின் விளைவு களையெல்லாம் மறந்து, நமது தலைமுறையினர் அதனைப் பல்வேறு இடங்களுக்குச் சுமந்துசென்று பரப்பிவரும் ஆபத்தான அரசியல் பரிசோதனைகளை நடத்தி வருகிறார்கள். நாம் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதுமே இந்த ஆபத்தான அரசியல் பரிசோதனைகள், தொடங்கப்பட்டு, இன்றுவரை அது பராமரிக்கப் பட்டு வருகின்றது.

ஒரு உள்நோக்கத்துடனோ அல்லது வேறு காரணங்களினாலோ இந்த ஆபத்தான விஷக் கிருமிகள் இன்று நமது முழு சமூகத்தையுமே நாசப்படுத்தியுள்ளன. நமது அரசியல் முன்னோர்களால் மரபுரீதியாக நம்மீது திணிக்கப்பட்ட, கேடு விளைவிக்கும் விஷக் கிருமிகளை நாம் கண்மூடித்தனமாக நமது எதிர்காலச் சந்ததிகளுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆபத்தான பரிசோதனையின் விளைவாக, ஆய்வுகூட எலிகளாக மாற்றப்பட்டுள்ள எங்களில் பலர், தங்களது தேசியம், இனம், மற்றும் சமயம் பற்றிய மனக்குழப்பத்தில் உள்ளனர். மதத் தீவிரவாதம், எனும் கொடிய விஷக்கிருமி ஏமாளிகளிடம் தொற்றி எமது தேசிய அடையாளத்தையே கேள்விக் குறியாகியுள்ளது.

உண்மையிலேயே, நாம் இன்று நேர்மையான இலங்யைராக இல்லை. இன்று நாம் சிங்கள பௌத்தர், சிங்கள கிறிஸ்தவர், வேறேதாவதொரு சிங்களவர், தமிழ் இந்துக்கள், தமிழ் கிரிஸ்தவர், வேறேதாவதொரு தமிழர், தீவிரவாத முஸ்லிம் அல்லது வேறேதாவதொரு முஸ்லிம் என்றுதான் நம்மை நாம் அடையாளப்படுத்தியுள்ளோம். இதன் அடுத்தகட்டம் என்ன?

ஸ்ரீலங்காவைவிட அதிக இனக் குழுக்கள் வாழும் சிங்கப்பூரை எடுத்துக்கொண்டால், அவர்கள் அந்தநாட்டைத் தமது சொந்தநாடாகவே நினைக்கின்றனர். அவர்கள் எப்போதுமே தம்மை ஒரு சிங்கப்பூர்வாசி என்று கூறுகிறார்களே ஒழிய இனம் அல்லது மதத்தைக் காட்டி அடையாளப்படுத்துவதில்லை. அந்நாட்டு அரசியல்வாதிகள் தமது நாட்டில் ஒரு இனத்தையோ மதத்தையோ ஏற்றத்தாழவுடன் நோக்குவதில்லை. எந்த ஒரு மதத்துக்கோ இனத்துக்கோ அதிகசலுகைகள் வழங்குவதுமில்லை. அந்நாட்டின் அடையாளச் சின்னமான பிரதமர் லீ குவான் யு ஒரு காலத்தில் சிங்கப்பூர் ஸ்ரீலங்காவைப் போலிருக்கவேண்டும் என விரும்பினார். அந்த பொற்காலத்தை நினைத்துப் பாருங்கள். அன்று எமது

வகுப்பில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள், மலாயர்கள் மற்றும் ஏனையவர்கள் என்று ஒன்றாய் இருந்தோமே. அப்படியே இருந்திருக்க கூடாதா என்று ஏங்குகிறது என் மனம். ஆனால் அந்தக் காலத்தில் வாழ்ந்த அரசியல்வாதிகளின் எண்ணங்கள் வேறாக இருந்தன. அவற்றில் ஒன்றுதான் நாம் எதையும் புரிந்துகொள்ளமுடியாத சிறுவயதினராக் இருந்தபோது இனரீதியாக எம்மைப் பாகுபடுத்துவது என்று அவர்கள் எடுத்தமுடிவு. சிறுவர்களாக எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் அவ்வளவுதான், இன அடிப்படையில் வெவ்வேறு வகுப்புகளாகப் பாகுபடுத்தி எங்களையெல்லாம் பிரித்துவிட்டார்கள். நீண்ட காலமாக ஒன்றாகப் பழகிவளர்ந்த நணபர்களைப் பிரிந்து நாம் அடைந்த மனவேதனை சொல்லுந்தரமன்று.

நானும் என்னைப் போன்ற மற்றும் பலரும் குழப்பத்திலிருந்தோம். காலனித்துவ காலத்துக்குப் பின்பும் அதனைத் தொடர்ந்து வந்த சுதந்திரத்துக்குப் பிந்தியகாலத்திலும், இந்தநாட்டில் காலூன்றியிருந்தவர்களின் சந்ததிகளாகிய நாம் பிறந்தது முதல் ஆங்கிலத்தையே கேட்டுப் பழகியிருந்தோம். எனவே அதுவே எங்களது பொதுவான முதல்மொழியாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து, நாங்கள் சிறுவர்களாக இருந்ததிலிருந்து இன்றுவரை எம்மிடையே இனம் பற்றிய உணர்வு தலைதூக்கத் தொடங்கியது. நாம் ஒருவருக்கொருவர் "வித்தியாசமானவர்கள்" என்பதை உணர்ந்தோம். இனிமேலும் நாமெல்லாம் இலங்கையர் என்று கருத எம்மால் முடியவில்லை. நாங்கள் சிங்களவர், தமிழர், அல்லது முஸ்லிம்கள் என்பனவற்றில் ஒன்றாகவே மாறிவிட்டோம். எமது தலைவர்கள் எங்களை இனக்குழுக்களாக பிரித்ததுடன் நின்றுவிடவில்லை, அதன்பின் ஒவ்வொரு இனத்தவரும் மற்றவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதன் மூலம் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் விதத்தில் எங்களை மூளைச்சலவை செய்யத் தொடங்கினார்கள்.

ஒரு காலத்தில் இலங்கையராக என்னோடு கைகோர்த்திருந்த எனது தலைமுறையைச் சேர்ந்தவர்களில் சிலர், ஒன்றில் தனிநாட்டை இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள், அல்லது ஒரு முகத்திரைக்குள் தம்மை மறைத்துக்கொண்டு வாழ்கிறார்கள் அல்லது தம்ம போதனைகளை நிந்திக்கும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே இன்று இங்கு, நான் ஒரு சிங்கள

கண்டுகொள்ள கூகுல்தேடல் (Google seach) ஒன்றை நடத்தவேண்டிய தேவை ஏற்படலாம். ஒருவரின் இன மற்றும் மதநம்பிக்கைகள் அவரது சொந்த விடயமாக இருக்கவேண்டும் என்ற என் கருத்தை உங்களில் பலர் ஏற்றுக் கொள்வீர்கள் என நான் நிச்சயமாக நம்புகிறேன். மதம், இனம் அல்லது இவை இரண்டும் சேர்ந்து டெமோகிளசின் வாளைப்போல மற்றவர்களது தலைக்குமேல் தொங்குவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது, அனுமதிக்கவும் கூடாது.


எமது அரசியல்வாதிகள் தங்களது சொந்த இலாபங்களுக்காக, தீவிரவாதத்தை முளையிலேயே கிள்ளி எறிவதற்குப் பதிலாக அதனை, அதன் அறுவறுப்பான பல வடிவங்களில் பிரசாரப்படுத்தியுள்ளதுடன், தொடர்ந்தும் பிரசாரம் செய்து வருகிறனர். இதனால் ஏற்படப்போகும் மோசமான பின்விளைவுகளை அவர்கள் எண்ணிப் பார்க்க ஏன் மறுக்கின்றனர்? அல்லது அதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லையா? எமது தலைவர்கள் தாம் ஏற்றுள்ள தலைமைத்துவத்தின் புனிதமான பொறுப்பைப் பற்றி எப்போதாவது நினைத்துப் பார்த்திருப் பார்களா? அதிகாரத்தில் அமரவேண்டும் என்ற பேராசை அவர்களது கண்களை மறைக்க, என்ன விலை கொடுத்தாவது நாட்டில் சீரழிவுகளை ஏற்படுத்தவும் தயாராக இருக்கிறார்களா? அவர்களுக்கு மனச்சாட்சியே இல்லையா? அவர்கள் தேசபிமானிகள் இல்லையா?

அவர்களிடம் கேட்பதற்கு ஏராளம் உள்ளது, தமது சுயநல நோக்கங்களையெல்லாம் இந்தக் கடைசி நேரத்திலாவது கைவிட்டு எமது ஸ்ரீலங்காப் பிரஜைகள் அனைவரையும் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபடுத்த முன்வரமாட்டார்களா?

ஷர்மினி சேரசிங்க


நன்றி: Colombo Telegraph

(முன்னாள் சமாதான ஒருங்கிணைப்பு செயலகத்தில் ஒரு பணிப்பாளரான ஷர்மினி சேரசிங்க, அதன் செயலாளர் நாயகங்களாக விளங்கிய ஜயந்த தனபால, மற்றும் கலாநிதி ஜோன் குணவர்தன ஆகியோரின் கீழ் பணியாற்றியுள்ளார். அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் முப்பது வருடங்களுக்கு மேலான அனுபவம் அவருக்கு உண்டு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொடுக்கிறார் காந்திஜி



ஆண்டு – 1936 இடம் - நாக்பூர் புகை வண்டி நிலையம் வயதான கணவனும் மனைவியும் ரயிலில் உட்கார்ந்துள்ளனர். சுற்றிலும் கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம். வாழ்த்து கோஷங்கள் வானை முட்டுகின்றன. அந்தத் தம்பதி உட்கார்ந்திருந்த ரயில் பெட்டி அருகில் கிழிந்த துணிகளோடு ஒருவர் நெருங்குகிறார். சன்னல் அருகே உட்கார்ந்திருக்கும் அந்த அம்மையாரிடம் ஒரு ஆரஞ்சுப் பழத்தை நீட்டுகிறார்.

அந்த அம்மையாரின் கணவர் அருகில் உட்கார்ந்திருக்கிறார். கிழிந்த சட்டை அணிந்திருப்பவர் அவரைப் பார்த்து கூறுகிறார் "நீங்கள் பெரிய மனுஷன் என்றால் அதற்கு முழுக் காரணமும் அம்மாதான்" என்கிறார்.

ரயில் ஓடத் தொடங்குகிறது. அந்தக் கிழிந்த சட்டை அணிந்திருப்பவரின் குரல் மீண்டும் கேட்கிறது. கணவரும் மனைவியும் மனக்குழப்பத்துடன் பயணம் செய்கின்றனர். அந்தத் தம்பதி வேறு யாருமல்ல மகாத்மா காந்தியும் அவரது மனைவி கஸ்தூரிபாவும்தான். கிழிந்த சட்டை அணிந்திருந்தவர் அவர்களின் மூத்த மகன் ஹரிலால்.


இன்று நாம் காணும் இந்தியாவில் பல அரசியல் கட்சிகளில் வாரிசு அரசியல். தலைவர்களின் குடும்ப ஆதிக்கம் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம், படிக்கிறோம், உணர்கிறோம். ராகுல் காந்தி, மகாத்மா காந்தியின் கொள்ளுப் பேரன் என்று நினைப்பவர்களும் இருக்கலாம். இந்திரா காந்தியின் கணவர் 'பெரோஸ் காந்தி' என்றே நம்மில் பலர் அறிந்துள்ளோம். இந்திராவின் கணவர் பெயர் 'பெரோஸ் கான்' என்பதும் நேரு இந்தத் திருமணத்தை விரும்பாத சூழலில் பெரோஸ் கான், பெரோஸ் காந்தி ஆக்கப்பட்டார் என்பதும் வரலாற்று உண்மைகள்.

ஜவஹர்லால் நேருவின் மனைவி கமலா நேரு நோய்வாய்ப்பட்ட நிலையில் அவருக்கு மருத்துவமனையில் பெரோஸ் கான் பெரிதும் உதவுகிறார். 1942-இல் பெரோஸ், இந்திரா மணவிழா நடக்கிறது. 1944-இல் ராஜீவ், 1946-இல் சஞ்சய் பிறக்கின்றனர். ராஜீவ் கான், சஞ்சய் கான் என்று அழைக்கப்பட வேண்டியவர்கள், ராஜீவ் காந்தி, சஞ்சய் காந்தி என்று அழைக்கப்படுகின்றனர். ராகுல் காந்தி, வருண் காந்தி வரை அந்தப் பெயர் நீடித்துக்கொண்டே போகிறது. ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா பெயருடனும் 'காந்தி' சேர்க்கப்பட்டது.

இந்த 'காந்தி'களின் பெயர்கள் மீண்டும் மீண்டும் தில்லி செங்கோட்டை அரியணையோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. காந்திஜிக்கும், கஸ்தூரிபாவுக்கும் பிறந்த மகன்கள் நான்கு பேர். ஹரிலால், மணிலால், ராம்தாஸ், தேவதாஸ். ஹரிலாலுக்கும் முன்பு பிறந்த மூத்த மகன் பிறந்த சில நாள்களிலேயே இறந்து விட்டார். எந்த அரியணைக் கனவுகளோடும் இவர்கள் வளர்க்கப்படவில்லை. மாறாக சுதந்திரப் போராட்டத்தில் இவர்கள் நாட்டுக்காக ஏராளமாக ரத்தம் சிந்தினர். இவர்களின் உடலும் உள்ளமும் புண்ணாகித் துன்புற்றனர்.

தந்தை - தனயன் என்ற உறவு காந்திஜிக்கும்





அவரின் மூத்த மகன் ஹரிலாலுக்கும் வித்தியாசமான சூழலில் சிதைந்து போய் இருந்தது. எனினும் ஹரிலால் விடுதலைப் போராட்டத்தில் சிறைப்படுத்தப்பட்டு சித்ரவதைக்கும் உள்ளாக்கப்பட்டார். தென் ஆப்பிரிக்காவில் காந்தி இருந்த சூழலில், தொடக்கம் முதலே காந்திஜியுடன் அவரது மூத்த புதல்வன் இணைந்து வாழ முடியவில்லை. நெறி தவறிப்போன தனது மூத்த புதல்வனின் வாழ்க்கையைச் சரிசெய்ய காந்திஜி முயற்சி மேற்கொண்டார். தென் ஆப்பிரிக்காவில் காந்தி நடத்திய போராட்டத்துக்கு ஹரிலாலையும் அழைத்தார். தென் ஆப்பிரிக்காவின் டிரான்ஸ்வால் சிறையில் சத்தியாக்கிரகியாகிய ஹரிலாலின் உடைமைகள் தகரப்பெட்டியில் வைக்கப்பட்டு அவரது முதுகுடன் சேர்த்துக் கட்டப்பட்டன. கைகளில் விலங்கு பூட்டி தெருக்களில் கைதியாக அடித்து இழுத்துச் செல்லப்பட்டார் ஹரிலால்.

தமது உண்ணாவிரதப் போராட்டத்தில் குடும்பத்தை ஈடுபடுத்தினார். அடியும் உதையும் பெற்று அவர்கள் காயத்தில் ஈக்கள் மொய்க்க சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். தன் பிள்ளைகள் என்பதற்காக ஒரு சிறு பலன் கூட அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று காந்திஜி உறுதியாக இருந்தார்.

லண்டனில் காந்தியின் மூத்த மகன் ஹரிலாலைப் படிக்க வைக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. பீரன் ஜீவா மேத்தா அதற்காக உதவிகள் செய்தார். காந்திஜியின் மகனை லண்டன் அனுப்பி வைக்கும்படி கேட்டார். காந்தியின் குடும்பத்துக்கு என்று அந்தப் பிரத்யேக ஏற்பாட்டை பீரன் ஜீவா மேத்தா செய்தார். காந்தியின் மகனுக்கும் பிறரைவிட முழுமையான தகுதி இருந்தது. எனினும் ஆசைப்பட்ட மகனை காந்தி லண்டனுக்கு அனுப்பி வைக்கவில்லை. காந்தியின் மூத்த மகன் ஹரிலால் வழக்குரைஞராகப் படிக்க விரும்பியதற்கு காந்தி உதவவில்லை. காந்தியின் இரண்டாம் மகன் மணிலால் படிக்கவும் காந்தி உதவவில்லை. தான் சிறையில் இருந்தபோது, சந்தையில் முள்ளங்கி வியாபாரம் செய்து ஆசிரமவாசிகளுக்கு உணவு தர வேண்டிய பொறுப்பை மகன் மணிலாலிடம் ஒப்படைத்தார் காந்திஜி.

காந்திஜியின் மனைவி கஸ்தூரி பாவின் தியாகம் நிகரற்றது. கஸ்தூரிபாவுடன் அவரது மகன் ராம்தாஸ் 15 வயதில் இருந்தபோது ஒரே சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். சிறைச்சாலை வாழ்க்கை காட்டு விலங்குகளுடன் வாழ்வதுபோல இருந்தது. இந்த நிலையில்தான் காந்திஜியின் மனைவி கஸ்தூரிபாவின் வாழ்க்கை சிறைச்சாலையிலேயே முடிந்தது. சிறைச்சாலை வளாகத்தில்தான் அவரின் இறுதிச் சடங்குகள் நடந்தன. 6 முறை - சுமார் 2 ஆண்டுகள் - கஸ்தூரிபா சிறைக் கைதியாக வாழ்ந்தார். தமது 69-வது வயதில் இருண்ட அறையில் தனிமைச் சிறையில் அவர் தைரியமாக இருந்தார். சொந்த ஊர் ராஜ் கோட்டில், இறக்கைகள் நறுக்கப்பட்ட பறவையாக சிறைக் கைதியாக வாழ்ந்தார். அவரின் 72-ஆவது வயதில் விலைமாதுகள் அடைக்கப்பட்டிருந்த அறையில் அவரை அடைத்து வைத்தது அன்றைய கொடூர அரசு. அப்போது கடைசி மகன் தேவதாஸ் பஞ்சாப் சிறையில் இருந்தார்.

இந்திய விடுதலைக்காக காந்திஜியின் குடும்பம் இப்படித்தான் மகத்தான விலை கொடுக்க வேண்டிவந்தது. இந்திய விடுதலைக்குப் பிறகு, ஒரு பியூன் வேலையைக்கூட தன் குடும்பத்தினர் ஏற்றுக் கொள்வதை காந்திஜி விரும்பவில்லை. பகத்சிங், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், டாக்டர் அம்பேத்கர், ஜின்னா போன்ற பல தலைவர்களுடன் காந்திஜிக்கு கருத்து வேறுபாடுகள் இருந்திருக்கலாம். எனினும் காந்தியடிகளை சான்றுகாட்டவும் முதன்மைப்படுத்தவுமான நிகழ்வுகளும் ஏராளம் உண்டு.

ஒரு கிறிஸ்துவ ஆதிதிராவிடரின் மலத்தைச் சுத்தம்செய்ய தன் மனைவிக்கு உத்தரவிட்டது, நாவிதத் தொழிலாக இருந்தாலும் ஒழுங்காகக் கற்றுக் கொள் என்று மகன் ராம்தாஸிடம் கூறியது என்று காந்தி பற்றி ஏராளமான செய்திகளைக் கூறலாம்.

உலகில் பல்வேறு நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள் நடந்துள்ளன. வன்முறை தவிர்த்து விடுதலைக்குப் போராடியதாக காந்தியடிகள் பலரால் முன்மொழியப்படுகிறார். கியூபா, பொலிவியாவின் விடுதலைக்காக அனைத்து வழிகளிலும் போராடியதாக எர்னஸ்ட் சேகுவேரா அறியப்படுகிறார். பல நிகழ்வு களில் இருவரையும் ஒப்பிட முடியாது. எனினும் சில ஒருங்கிணைந்த அம்சங்களும் உள்ளன. இருவரின் மரணமும் இயற்கையானதல்ல. துப்பாக்கித் தோட்டாக்களே இருவரின் வாழ்வையும் முடித்தன.

தம் வாரிசுகளை இவர்கள் எந்த வகையில் எதிர்பார்த்தார்கள் என்பதிலும் விசித்திரமான சில ஒற்றுமை அம்சங்கள் உள்ளன. தம் பிஞ்சுக் குழந்தைகளுக்கு "சே" பின்வருமாறு கடிதம் எழுதினார்.

"இக்கடிதத்தை நீங்கள் படிக்கும் போது நான் உயிருடன் இருப்பேனா என்பதே சந்தேகம். என்னை அதிகம் நினைத்திருக்கமாட்டீர்கள். சின்னக் குழந்தைகளுக்கு என்னை நினைத்துப் பார்க்க எதுவும் இருக்காது. நீங்கள் நல்ல புரட்சியாளராக வளர வேண்டும். எங்கு அநீதி நடந்தாலும் எதிர்த்துப் போராட வேண்டும்" இத்தகைய மகத்தான மனிதர்கள் தங்கள் குழந்தைகளை சொகுசு வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்தவில்லை. தங்களைப்போன்றே தங்கள் குழந்தைகளும் சமூகத்துக்கு உழைக்க வேண்டும் என்றே எதிர்பார்த்தனர்.


"விடுதலைக்கான போராட்டத்தில் நீ சிறையில் மரணம் அடைந்தால், உன்னை தெய்வமாக வழிபடுவேன்" என்று மனைவி கஸ்தூரிபாவிடம் காந்தி அடிகள் கூறினார். காந்திஜியின் தியாகம் மட்டுமல்ல, காந்திஜியின் குடும்பத்தின் தியாகமும் நிறைய நிறையக் கற்றுக்கொடுக்கிறது. பொது நலனுக்காகத் தம்மை அர்ப்பணிப்பவர்களை சமூகம் சுவாசிக்கும்வரை கொண்டாடிக்கொண்டே இருக்கும்.

(வெ.ஜீவகுமார்)

நன்றி : தினமணி (30.1.2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூபா தேர்தலில் வாக்களித்தார் முன்னாள் ஜனாதிபதி காஸ்ட்ரோ




கியூபாவில் 03 பெப்ரவரி 2013ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ஃபிடல் காஸ்ட்ரோ நேரில் சென்று வாக்களித்தார்.

கடந்த 2010ம் ஆண்டுக்குப் பின்பு பொது இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்து வந்த காஸ்ட்ரோ தேர்தலில் வாக்களித்துடன் ஒரு மணி நேரம் ஊடகத்தினரிடமும், மக்களிடமும் உரையாடினார்.

86 வயதான காஸ்ட்ரோ, தலைநகர் ஹவானாவில் உள்ள வாக்குச் சாவடிக்கு வந்து ஜனநாயக கடமையை ஆற்றினார்.

வாக்குப் பெட்டியில், ஒட்டுச்சீட்டை போட்ட பின்பு அதற்கு அருகில் நின்று கொண்டிருந்த 2 சிறுவர்களுக்கும் கை குலுக்கி வாழ்த்து தெரிவித்ததுடன் வாக்களிப்பதற்காக வரிசையில் நின்றிருந்த மக்களுக்கும் காஸ்ட்ரோ வாழ்த்து தெரிவித்தார்.

# அமெரிக்காவே பயங்கரவாதத்தில் முன்னிலையில் உள்ளது



## - நோம் சோம்ஸ்கி

உலக அளவில பயங்கர வாதத்தில் அமெரிக்காவே முன்னிலையில் இருக்கிறது என்று உலக புகழ் பெற்ற அமெரிக்கா வின் தலை சிறந்த சிந்தனையாளர், வரலாற்று ஆய்வாளர் நோம் சாம்ஸ்கி தெரிவித்துள்ளார். ஈரானின் பிரஸ் டிவிக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது : சர்வதேச சட்டம் முறையாக அமுலாக்கப்படுமானால் உலக அளவில் பயங்கர வாதத்தில் அமெரிக்காவே முன்னிலையில் இருக்கிறது என அங்கீகரிக்கப்படும். பயங்கரவாதத்திற்கு அதிகாரப்பூர்வமான விளக்கத்தை பார்த்தோமானால் மிகவும் நன்றாக இருக்கிறது. அதே போல் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் பயங்கரவாதத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் நன்றாக இருக்கிறது. ஆனாலும் அதில் சில குறைபாடுகள் இருக்கிறது. அதனை பொருத்திப் பார்த்தாலும் அமெரிக்கதான் உலக அளவில் பயங்கரவாதத்தில் முன்னணியில் இருக்கும் நாடு என்பது தெரிய வரும்.


1980ம் ஆண்டில் அமெரிக்காவின் அதிபராக இருந்த ரோனால்ட் ரீகன் பயங்கரவாதத்திற்கு எதிராக தொடர்சியான போர் தொடுக்கப்படும் என அறிவித்தார். அதன்படி அந்த காலகட்டத்தில் அமெரிக்காவின் கொள்கையில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது மையக்கருத்தாக சேர்க்கப்பட்டது. 1981ம் ஆண்டு நான் இதுகுறித்து எழுதியிருக்கிறேன்.

இப்போது கேள்வி என்னவென்றால் சட்டபூர்வமாக பயங்கரவாதத்திற்கு எதிராக போர் தொடுக்கிறோம் என்ற பெயரில் அமெரிக்கா 2003ம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. இதில் அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து செயல்பட்டது. அதனை நியாயப்படுத்த பயங்கரமான அழிவுத் திறன் கொண்ட ஆயுதங்களை ஈராக்கின் சதாம் உசேன் அரசு வைத்திருக்கிறது என சட்டத்தை தங்களுக்கு சாதகமாக துணைக்கு அழைத்துக் கொண்டனர். ஆனால் நிகழ்ந்தது என்ன? ஈராக்கை பேரழிவுக்கு உள்ளாக்கிய பின்னரும் அமெரிக்காவால் ஒரு சிறு ஆயுதத்தைக் கூட கைப்பற்ற முடியவில்லை.

சதாம் அரசை கவிழ்க்க வேண்டும் என்பதுதான் நோக்கம். ஆனால் அதற்கு கூறப்பட்ட காரணம் பயங்கர பேரழிவுகளை உருவாக்கும் அயுதங்களை வைத்திருப்பது என்பது. ஆனால் அது உண்மையில்லை என்பது பின்னர் தெளிவாகியது. ஈராக் தாக்குதலின் போது அமெரிக்கா ராணுவத்தினர் 1 லட்சத்து 70 ஆயிரம் பேரை அனுப்பியது. 500க் கும் மேற்பட்ட ராணுவத் தளங்களை அமைத்து பேரழிவை உண்டாக்கியது. அதன் விளைவு 10 லட்சத்திற்கு மேற்பட்ட ஈராக்கியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்தது என்று தெரிவித்துள்ளார்.



# சொந்த மக்களைக் கொல்ல உத்தரவிட்டுள்ளார் ஒபாமா: அசாஞ்ஜே குற்றச்சாட்டு



சொந்த நாட்டு மக்களையே கொல்ல அமெரிக்க அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார் என்று விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஜூலியன் அசாஞ்ஜே குற்றம் சாட்டியுள்ளார்.

அல்-காய்தா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளுடன் அமெரிக்கர்களுக்கு தொடர்பு இருந்தால் அவர்களை எதிரிகளாக்க் கருதி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்துக்குரிய அமெரிக்கர்களைக் கொன்றுவிட ஒபாமா அளித்துள்ள உத்தரவாகவே இது கருதப்படுகிறது. இந்த உத்தரவு அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பிரிட்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் தங்கியுள்ள அசாஞ்ஜே, அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், தங்கள் நாட்டு மக்களையே கொல்ல உத்தரவிட்டிருப்பதன் மூலம் அமெரிக்க நாட்டு அரசியல் நடைமுறையையே ஒபாமா சிதைத்துவிட்டார். இதுபோன்ற அரசுகள் மக்களை மதிக்காமல் செயல்படும்போதுதான், அவர்களின் ரகசியங்களை அம்பலப்படுத்த விக்கிலீக்ஸ் போன்ற அமைப்புகள் தேவைப்படுகின்றன என்றார்.

ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல இடங்களில் பயங்கரவாதிகளுக்கு எதிராகவும், உளவு பார்ப்பதற்காகவும் ஆள் இல்லாத விமானங்களை அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது. இது தொடர்பான விதிகளின் முழுவிவரங்களை வெளியிட அமெரிக்கா தயாரா? இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் இருந்து யாராவது எங்களுக்கு உதவ முன்வந்தால் வரவேற்போம். அவர்களின் பெயரை ரகசியமாக வைத்திருப்போம். அமெரிக்காவின் திரைமறைவு நடவடிக்கைகளை உலகுக்கு அம்பலப்படுத்துவோம் என்றும் அசாஞ்ஜே கூறியுள்ளார்.


ஆப்கானிஸ்தான், ஈராக் போர் தொடர்பான அமெரிக்காவின் ரகசிய ஆவணங்கள் பலவற்றை தனது விக்கிலீக்ஸ் இணையதளத்தில் கசியவிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் அசாஞ்ஜே. இதனால் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் வெறுப்புக்கு உள்ளானாலும், சர்வதேச அளவில் மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பிரபலமானார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அசாஞ்ஜே மீது, ஸ்வீடனில் பாலியல் குற்றச்சாட்டு வழக்கு உள்ளது. இது தொடர்பாக பிரிட்டனில் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார். இப்போது பிரிட்டனில் இருந்து ஈக்வடார் செல்ல அவர் முயற்சித்து வருகிறார். ஆனால் பிரிட்டன் அதற்கு அனுமதி தராததால் அந்நாட்டில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தங்கியுள்ளார்.

அதே நேரத்தில் அசாஞ்ஜேயிடம் தாங்கள் விசாரணை நடத்த வேண்டியிருப்பதால், தங்களிடம் அவரை ஒப்படைக்க வேண்டுமென்று ஸ்வீடன் அதிகாரிகள் கோரி வருகின்றனர். அவர் ஸ்வீடனுக்கு நாடு கடத்தப்பட்டால் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலால் பிரச்சினைக்கு கலந்துரையாடல் மூலம் தீர்வு காண்பதே சிறந்தது: மல்வத்து தேரர்



கலந்துரையாடல்கள் மூலம் ஹலால் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே சிறந்தது என மல்வத்து பீட மஹாநாயக்க தேரர் திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார். ஹலால் தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வெளியிட்ட அறிக்கையினை வரவேற்ற அவர், அரசாங்க நிறுவனமொன்றிடம் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை கையளிப்பது சிறந்தது எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.


முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் பிரதிநிதிகளுக்கும் மல்வத்து பீட மஹாநாயக்க தேரரிற்கும் இடையிலான சந்திப்பு 23 பெப்ரவரி 2013 சனிக்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

பல நூற்றாண்டுகளாக காணப்பட்டு வரும் சிங்கள முஸ்லிம் உறவில் எந்தவித பாதிப்பினையும் ஏற்படுத்த கூடாது என தேரர் தெரிவித்ததாக இந்த சந்திப்பில் கலந்துகொண்ட முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்தார்.

இரு இனங்களுக்கும் இடையிலான உறவு மேலும் தொடர வேண்டும். இது தொடர்பிலான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தேரர் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார். தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தொடர்பில் முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் பிரதிநிதிகள் தன்னை சந்தித்தமை முக்கியத்துவமிக்கது என மஹாநயக்க தேரர் குறிப்பிட்டார் என என்.எம்.அமீன் மேலும் தெரிவித்தார்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக இடம்பெற்ற இந்த சந்திப்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம்.எம்.சுஹைர், சிப்லி அஸீஸ், இக்ரம் முஹம்மட், கலாநிதி எம்.ஏ.சுக்ரி மற்றும் மௌலவி இப்றாஹீம் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

# புதினாக்கீரையின் மகத்துவம்



அடிக்கடி புதினாக்கீரையைச் சாப்பிட்டு வந்தால் உடலிலுள்ள இரத்தம் சுத்தமாகும். புதிய இரத்தம் உற்பத்தியாகும். எக்காரணத்தினாலாவது வயிற்றுப் போக்கு ஏற்பட்டிருந்தால், அந்தச் சமயம் புதினாக்கீரைத் துகையலைச் சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு நின்றுவிடும்.

சிறு குழந்தைகளின் வயிற்றுப் போக்கு, வாந்தி குணமாக . . .

சிறு குழந்தைகளுக்கு ஆகார விகற்பத்தின் காரணமாக வயிற்றுப் போக்கு வாந்தி ஏற்படுவதுண்டு. இதற்குப் பல வகையான மருந்துகள் உண்டு என்றாலும் புதினாக்கீரைக் கஷாயம் கைகண்ட மருந்தாக இருக்கிறது. புதினாக்கீரை இலைகளை மட்டும் ஆய்ந்து எடுத்து ஒரு கைப்பிடியளவு அம்மியில் வைத்து லேசாக நைத்து, அதை ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து, நன்றாக வதக்கி அதில் ஆழாக்களவு தண்ணீர் விட்டு நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். அரை ஆழாக்களவாகச் (1/4 லீட்டர்) சுண்டியபின் சட்டியை இறக்கி வடிகட்டி, அதில் வேளைக்குச் சங்களவு வீதம் காலை மாலையாக மூன்று வேளை கொடுத்தால் போதும், வயிற்றுப் போக்கு, வாந்தி நின்று விடும்.

கர்ப்பஸ்திரீகளுக்கு ஏற்படும் வாந்தியை நிறுத்த

கருத்தரித்த இரண்டாவது மாதம் முதல் கருத்தரித்திருப்பதை மெய்ப்பிக்க, காலை வேளையில் வாந்தி உண்டாகும். சில சமயம் ஆகாரம் உண்டவுடன் வாந்தி வரும். தலைச் சுற்றல், சோம்பல், அரோசிகம் ஏற்படும். இதை மசக்கை வாந்தி என்று கூறுவார்கள். தினசரி இப்படி இருக்கும். 2, 3 வாரங்களுக்குப் பின் இது தானே மாறிவிடும். சில பெண்களுக்கு பிரசவிக்கும் வரை வாந்தி சாயந்திர வேளைகளில் ஏற்படும். இந்த மாதிரி வாந்தியை நிறுத்த புதினா நன்கு பயன்படுகிறது.

புதினாக்கீரையைக் கொண்டு வந்து ஆய்ந்து எடுத்து, உரலில் போட்டு இடித்து அதை எடுத்துச் சாறு பிழிய வேண்டும். பிழிந்த சாறு இரண்டு ஆழாக்களவு எடுத்து அதைத் துணியில் வடிகட்டி ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, களிம்பு ஏறாத ஒரு பெரிய பாத்திரத்தை எடுத்து அதில் இந்தச் சாற்றைவிட்டு அதில், ஒரு சீசா அளவு அதாவது சின்னபடிக்கு ஒரு படியளவு சீமைக் காடியை விட்டு நன்றாகக் கலந்து ஒரு மணி நேரம் வைத்திருந்து, பிறகு அத்துடன் அரை கிலோ பழுப்புச் சர்க்கரைச் சேர்த்து நன்றாகக் கரைத்து, இந்தச் சாற்றை வேறு ஒரு பாத்திரத்தின் மேல் துணி வேடு கட்டி அதன் மூலம் வடிகட்டி எடுத்து, முதல் பாத்திரத்தைக் கழுவி அதில் இதைவிட்டு, அடுப்பில் வைத்து, நன்றாகக் காய்ச்ச வேண்டும். இந்த சமயம் மருந்து சர்பத் போல பாகுபதமாகும். நன்றாக ஆறியபின் அதை ஒரு சுத்தமான சீசாவில் விட்டு பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். வாந்தி வரும் சமயம் இந்தப் பாகில் அரைத் தேக்கரண்டியளவு எடுத்து உள்ளங்கையில் விட்டு, நாவால் நக்கி அதை வாயில் வைத்துச் சுவைத்து விழுங்க வேண்டும். இந்த விதமாக ஒரு நாளைக்கு எத்தனை தரம் வேண்டுமானாலும் சுவைக்கலாம். எந்த விதமான கெடுதலும் ஏற்படாது.

ரொட்டி, ஆப்பம், தோசை, இட்டிலி இவைகளை இந்தப் பாகில் தொட்டுத் தின்னலாம். ருசியாக இருக்கும். காலை வேளையில் இவ்விதம் சாப்பிடுவது நல்லது.

புதினாக்கீரையை இரண்டு அவுன்ஸ் எடுத்து, ஆறு அவுன்ஸ் நீரில் போட்டு, மூன்று மணி நேரம் ஊற வைக்கவும். பிறகு நீரை தெளிய வைத்து குடித்து வரவும். இக்குடிநீரை அருந்துவதால் வாந்தி, வாயுவு கோளாறுகள், வயிற்றுப் போக்கு, பொருமல் போன்ற நோய்கள் குணமாகும்.

புதினாக்கீரையைத் துவையலாகவோ அல்லது அவித்து பிற உணவுகளுடன் சேர்ந்து சாப்பிட்டு வந்தால் பெண்களின் மாதவிலக்கு கோளாறுகள் சீர்படும். புதினாக்கீரையை கஷாயமாகவோ அல்லது சூப்பாகவோ தயாரித்து அருந்திவரின் இருதய சம்பந்தமான நோய்கள் நிவாரணம் பெறும். தொண்டைப்புண், மூச்சுத்திணறல் போன்ற கோள்றுகளுக்கு புதினாக்கீரையை நன்கு அரைத்து கழுத்தில் வலியுள்ள பகுதியில் பற்றுப் போட்டு வர குணம் தெரியும்.

புதினாக்கீரையைக் கொண்டு ஒரு அருமையான பற்பொடி கூட தயார் செய்யலாம். இந்த புதினா பற்பொடியைக் கொண்டு தினசரி பல் துலக்கி வந்தால் பல் சம்பந்தமான எல்லா வியாதிகளும் குணமாகும். கஷ்டத்தைப் பாராமல் ஒவ்வொருவரும் புதினா பற்பொடி தயாரித்து பல்துலக்கி வந்தால், பற்கள் முத்தைப் போல வெண்மையாகவும், பிரகாசமாகவும் தோன்றும். பல் சம்பந்தமாக எந்த வியாதியும் வராது. இதைத் தயாரிப்பதும் சுலபம் தான்.

புதினாக்கீரையை எடுத்து, சுத்தம் பார்த்து, அதை ஒரு பெரிய தட்டு அல்லது முறத்தில் போட்டு வெய்யிலில் நன்றாகக் காயவைக்க வேண்டும். புதினா காய்ந்து சருகான பின் உரலில் போட்டு இடிக்கவேடும். இந்த சமயம் இலை இருக்கும் அளவில் எட்டில் ஒரு பங்கு கறி உப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இடித்துச் சல்லடையில் சலித்து, கண்ணாடி அல்லது மங்கு ஜாடியில் போட்டு வைத்துக் கொண்டு உபயோகப்படுத்த வேண்டும். தகர டப்பா கூடாது.

- செங்கை நிலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலால் கலவரம்




அவசரக் கூட்டமொன்றுக்கு எனக்கும் அழைப்பு வந்திருந்தது. ஒரு சிலருக்கு மட்டுமே அழைப்பு விடுத்திருப்பதால் தவறாமல் கலந்து கொள்ளுமாறும் குறிப்பிட்டிருந்தனர்.

அண்மைக்காலமாக சூடு பிடித்துள்ள விவகாரங்களின் பின்னணியில் முக்கியமான சில நகர்வுகளை மேற்கொள்வது பற்றிய கலந்துரையாடல் அங்கு நடைபெற்றது.

'நாங்கள் சிங்கள சகோதரர்களுக்கு நம்மைப்பற்றி முறையாக புரிய வைப்பதற்குத் தவறி விட்டோம். அதனால் இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் பிழையானதும் தப்பானதும் அபிப்பிராயங்களை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.' - கூட்டத்தின் தலைவர் உணர்ச்சிபூர்வமாக தம் முடிவை விளக்கினார்.

சபையில் இருந்த எல்லோரும் இந்த விடயத்தில் ஏகோபித்த கருத்தைக் கொண்டிருந்தார்கள்.

என்னைப் பார்த்துச் சொன்னார்: 'சிங்கள் மொழியிலே எழுதவும் பேசவும் திறமை கொண்ட உங்களைப் போன்றவர்களின் சேவை இப்போது பன்மடங்கு தேவைப்படுகிறது.'

'நாங்கள் சிங்களத்தில் எழுத்தாற்றல் கொண்ட இளைஞர்களுக்கு பட்டறைகளை ஏற்பாடு செய்து எழுதத் தூண்டலாம்.' - இது ஒரு ஆலோசனை.

'இஸ்லாம் பற்றிய உரைகளை சிங்களத்தில் நிகழ்த்தி சீடீ வடிவில் மாற்று . மதத்தினருக்கு வழங்கலாம்.' –மற்றுமொரு சிந்தனை.

'கலந்துரையாடல்களை நிகழ்த்தி அவர்களின் ஐயங்களைப் போக்க வழி செய்யலாம்'.

'டீவீ, ரேடியோ போன்றவற்றில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்'.

'சிங்களப் பத்திரிகைகளில் நமது ஆக்கங்கள் வர வேண்டும்'.

'முஸ்லிம்களுக்கு எதிராக இன்டர்நெட்டில் என்னவெல்லாமோ எழுதித் தள்ளியிருக்கிறார்கள். நாமும் முடிந்தளவு வெப்சைட்டுகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.'

'..........................'

இந்த நாட்களில் வெளியே கொட்டும் அடை மழையையும் மீறி ஆலோசனை மழை இடி மின்னலுடன் கொட்டித் தள்ளியது.

கருத்துக்கள் களைப்படைந்த நிலையில் சபையில் அமைதி நிலவியது. தலைவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

'நீங்கள் ஒன்னுமே சொல்லாம இருக்கீங்க.?'

பொது வாகனங்களில் பயணிக்கும் போது பாதையோரத்தில் புத்தர் சிலையைக் கண்டால் பொதுவாகவே பௌத்தர்கள் உடனடியாக தமது ஆசனத்தில் இருந்து எழுந்து நின்று விட்டு மீண்டும் உட்கார்ந்து கொள்வார்கள். இதனை அவர்களே 'ஷனிக பக்திய' (திடீர் பக்தி) என அழைப்பதுண்டு. அத்தகையதொரு ஆவேசத்தில் தான் இந்த ஆலோசனை மழை கொட்டியது என்பது எனது கருத்தாக இருந்தது. இதனை சொன்னால் பெரும்பாலும் இவர்கள் எல்லோரும் என்னோடு மனஸ்தாபப் படுவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

ஏற்பட்டுள்ள நிலவரத்தில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற இவர்களது உணர்வு மிகத் தூய்மையானதாக எனக்குத் தோன்றியது. அதனால் அவர்களை இவ்விடயத்தில் மேலும் தூண்டும் விதமாக ஏதாவது செய்யலாமா என்று தான் நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஆகவே, ஒவ்வொருவரும் சொன்ன கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மெச்சினேன். இறுதியாக எனது கருத்தை நானாகச் சொல்லாமல் அவர்களிடம் இருந்தே வெளிவருவதற்குரியவாறு முயற்சி செய்தேன்.

'இதற்கு முன்னர் நமது வரலாற்றில் சிங்கள முஸ்லிம் உறவு நெருக்கடிக்குள்ளான சம்பவங்கள் நடந்திருக்கின்றன தானே?' – அப்பாவித் தனமாக விசாரித்தேன்.

'இதென்ன கேள்வி? எத்தனை கலவரங்களைச் சந்தித்திருக்கிறோம். 1915 கலவரத்தை விட மோசமான கலவரம் எதுவாக இருக்க முடியும்.' – என் மீது கோபப்படுகின்றார்கள் என்பது வசனத்தின் கடுமையிலும் சொன்ன வேகத்திலும் பிரதிபலித்தது. ஆனால் எதிர்பார்த்தது தான்.

நானும் சமாளித்துக் கொண்டு புரியும் மொழியில் பேசலானேன்.

'நான் என்ன சொல்ல வாறேன் என்டா, இந்தக் கலவரங்களுக்கெல்லாம் காரணம் நாங்க இஸ்லாத்த வௌங்கப் படுத்தல்ல என்டது தானே' - இந்தக் கேள்வியை நான் ஒவ்வொரு சொல்லாக அழுத்தி வலியுறுத்தி முன் வைத்தேன்.

சபையில் அமைதி நிலவியது. தொடர்ந்து சொன்னேன்: 'மற்றக் காலங்கள்ல கலவரங்கள் வராத காரணம் சிங்களவர்கள் அப்போதெல்லாம் இஸ்லாத்த பற்றி சரியாக வௌங்கியிருந்தாங்க என்டும் நெனைக்கலாம் தானே?'

சற்று முன்னர் கொந்தளித்தவர்கள் தற்போது அமைதியாகக் காணப்பட்டார்கள். சிந்தனையில் ஆழ்ந்திருப்பதாகத் தோன்றியது.

தலைவர் மட்டும் பேசினார்: 'நீங்க என்ன சொல்ல வாறீங்களோ தெரியல்ல. கொஞ்சம் வெபரமாச் சொன்னா நல்லம் தானே.' என்றார்.

'1915 கலவரத்துக்கு பின்னணிக் காரணம் சிங்களவர்கள் முஸ்லிம் பள்ளியின் முன்னால் பறையடித்துக் கொண்டு போகக் கூடாது என்று தெரிந்து வைக்காதது என்று நினைக்கிறோமா.? அப்படி அல்ல. அதே போல 2015 நிலவரத்துக்குக் காரணம் முஸ்லிம்கள் ஹலால் தான் சாப்பிடுவாங்க என சிங்களவர்களுக்குத் தெரியாது என்பதும் அல்ல. இது ஒவ்வொன்றுக்கும் பின்னணியில வேறு பல காரணிகள் இருந்தன என்று சொல்ல வருகிறேன்.'

'ஹ்ம்.........ம்....அது சரி. அப்படின்டா உண்மையான காரணத்த கொஞ்சம் வௌங்கப்படுத்துங்களேன்.'

'நீங்களே சொல்லுங்களேன். என்னென்ன விசயத்துல சிங்களவன் நம்மலோட சண்டக்கி வாரான். அவன் ஏன் கோபத்தோட இருக்கான்?'

'அவனுகளுக்கு பொறாம. இஸ்லாம் வளர்ந்தா இந்த நாடும் முஸ்லிம் நாடாகிடும் என்டு பயம். துவேசிகள்...' - இது ஒரு விளக்கம்.

'நாங்கள் இஸ்லாத்த அவங்கள் மத்தியில சிங்களத்துல பிரசாரம் செஞ்சா இந்தப் பயம் கூடுமா, குறையுமா? எல்லாரையும் இஸ்லாமாக்க பாக்கிறான் என்டு ஆத்திரப்படுவானா மாட்டானா?' – நான் அவரிடம் வினவினேன்.

'நாங்க பாங்கு சொன்னா புடிக்காது. பள்ளி கட்டினா புடிக்காது. பேஸ் கவர் போட்டா துவேசம் காட்டுறான். மாடறுக்க வேணாமாம். ஹலால் சர்டிபிக்கேட் வேணாமாம். வேறென்ன இதுகள வெச்சித்தான் ஹம்பயாவோட சண்டக்கி வாறான்.' - தலைவரே விளக்கினார்.

'அது மட்டுமல்ல ஹாஜி. நம்ம ஆளுகளும் சில வி[illegible] [illegible] மா[illegible] [illegible] ஆக்கல் வாங்கல் விசயத்துல ஏமாத்து. அவன்ட கண்ணுல குத்துற மாதிரி சொத்துகள வாங்கி குவிச்சிட்டிக்கிறோம்.' –வெப்சைட் செய்ய விரும்பியவரின் பாபோச்சாரணம்.

கலந்துரையாடல் சரியான பொயின்டுக்கு வந்ததை நானும் பலமாக ஆமோதித்தேன்.

'பாத்தீங்களா. துவேசம் உருவாகுறதுக்கு காரணமான இந்தக் காரணங்கள்ல எதையாலும் நாம விட்டுக் கொடுத்தோமா? இல்லயே... தொடர்ந்தும் கிராமத்துல எல்லாப் பள்ளியிலயும் லவுட்ஸ்பீக்கர்ல பாங்கு. நாலு பேர வெச்சி தொழுவிக்கிற இமாமும் லவுட்ஸ்பீக்கரப் போட்டுத் தான் தொழுவிக்கிறார்... எங்களாலேயே சகிக்க முடியல்ல. அவன்ட சகிப்புத் தன்மைக்கும் அளவு இருக்குதா இல்லையா... குறைந்தது இதுலயாவது கவனம் செலுத்தி இதை நிப்பாட்டிக் கொள்ள கரிசனை கொண்டோமா?

'பசாரில் சாமான் வாங்க வார சிங்களவர்கள ரோட்டுல நிப்பாட்டி வெச்சிட்டு, நாம கடைகள பூட்டுறோம் தொழுகைக்கு. இது தான் மார்க்கப் பண்பா? தூரக் கிராமங்களில் இருந்து வரும் அப்பாவி சிங்களவர்களை ஆத்திரமுறச் செய்யும் காரியமா இல்லயா?...

'சிங்களவனே கேட்கிறான்... பள்ளி தான் கட்டுறீங்க.. ஒரு ஸ்கூல் கட்ட மாட்டீங்களா?... அரபுக் காரன்ட காசுல லட்சக் கணக்கில் குர்பான் கொடுக்க இந்த பௌத்த நாடு தானா கெடச்சது..?'

'இவற்றில் இருந்து தவிர்ந்து கொண்டால் பிரச்சினை தீருமா இல்லயா?' – தீர்க்கமாக நேராக கேள்வியை விடுத்தேன்.

சிந்தனை வயப்பட்டிருந்த தலைவர் சொன்னார்: 'சரி தான் நமது பிழையான அல்லது கவனக் குறைவான நடவடிக்கைகளால தான் நாங்க பேரினத்துடைய கோபத்தையும் துவேசத்தையும் தூண்டி விடுகிறோம். நீங்கள் சொல்றது போல நாங்கள் தான் எங்களுடைய பிழையான நடத்தைகள் மூலமாக இஸ்லாத்தை பிழையாக அவர்களுக்கு விளங்க வைத்திருக்கிறோம்.'

'தலைவர் அவர்களே. நாம் முதலில் அவர்களுக்குத் தொந்தரவையும் சந்தேகத்தையும் உருவாக்கும் விடயங்களை விட்டுவிடுவோம்.' –என்றேன் குறுக்கீடுகளை எதிர்பார்த்த வண்ணம்.

'எங்கள் உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்க முடியாது? உலமா சபைத் தலைவரும் அப்படித் தான் சொல்லியிருக்கிறார்' -ஆவேசமான ஒரு குரல் ஒலித்தது.

'எங்கள் பிழைகளைத் திருத்திக் கொள்வது உரிமையை விட்டுக் கொடுப்பது ஆகாது. உரிமைகள் என்ற பெயரில் பேரினத்தின் சந்தேகத்தை அதிகரிக்கச் செய்யவும் கூடாது. ஆத்தகைய விட்டுக் கொடுப்புகள் தான் பெரிய வெற்றிகளுக்கு முதற்படி. ஹுதைபியா சம்பவத்தில் நாம் அதைத் தானே படிக்கிறோம்' –என்று விளக்கியதை ஆவேசம் ஏற்றுக் கொண்டிருந்தது. என்னைப் பொறுத்த வரை இங்கு எந்த வித உரிமைப் பிரச்சினையும் கிடையாது. உரிமை, சலுகை, கடமை என்பவற்றை விளக்கும் தருணமாகவும் அது எனக்குத் தோன்றவில்லை.

'அப்ப நாங்க லவுட்ஸ்பீக்கர் அதான நிப்பாட்டுவம். தொடர்ந்து இன சௌஜன்யத்துக்கு பாதகமான எங்கள் செயல்களை திருத்தியமைக்க முயற்சி செய்வோம். இன சௌஜன்யத்தை வளர்க்கும் காரியங்களை அடையாளங் கண்டு அவற்றில் ஈடுபடுவோம்' – என்று தலைவர் முடிவுரையை வழங்கியவாறே என்னைப் பாத்தார்.


'இதையெல்லாம் சிங்களவன ஏமாத்துறதுக்கு செய்யாம இதய சுத்தியோடு செய்வோம்' என்று அவரது வார்த்தைகளை முடித்து வைத்தேன்.

அடுத்த கூட்டத்துக்கு தலைவரின் அழைப்பை எதிர்பார்த்து கலைந்து சென்றோம்.

-விவேகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவல்லி மெகர்பானுவின் மசாலாக்களும், இளவரசன் அப்பாசின் பதில்களும்



இஸ்லாமியர்கள் நாட்டுப் புறவியலுக்கு அளப்பரிய பங்களிப்பு செய்துள்ளனர். குறிப்பாக பக்கீர்ஷாக்கள் என்ற இஸ்லாமிய கலையாளர்கள் செய்துள்ள பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும். இந்தக் கட்டுரையில் பக்கீர்கள் பாடும் கதைப் பாடல்களில் காணப்படும் கேள்வி – பதில்களைப் பற்றி மட்டும் சில செய்திகளை வாசகர்கள் முன் வைக்கிறேன். பக்கீர்கள் கிராமங்களில் இரவு நேரத்தில் ஒரு குழுவாக அமர்ந்து, சில கதைப் பாடல்களைப் பாடுவார்கள். அப்படிப்பாடும் கதைப் பாடல்களில் ஒன்று 'நூறு மசாலாக்கதை' என்பது. 'மசாலா' என்பது பாரசீகச் சொல். இச்சொல்லுக்கு வினா அல்லது புதிர் என்று நாம் பொருள் கொள்ளலாம்.

சீனமா நகரை ஆளும் 'பாகவதி' என்ற அரசனுடைய மகளின் பெயர் மெகர்பானு. அவள் பருவ வயதை அடைந்து பல கலைகளையும், ஞான மார்க்கத்தையும் கற்றுத் தேர்ந்து ஞானவல்லியாகத் திகழ்ந்தாள். இவள் தன்னைப் போல் ஞானமும், அறிவும் உள்ள இளவரசனைத்தான் மணமுடிக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். எனவே "நான் கேட்கும் நூறு கேள்விகளுக்கு எந்த நாட்டு இளவரசன் சரியான பதிலைச் சொல்கிறானோ, அவனைத்தான் நான் மணமுடிப்பேன். என்னுடைய கேள்விகளுக்குச் சரியான பதிலைச் சொல்லாத இளவரசர்கள், எத்தனை கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லையோ அத்தனை கசையடிகளைப் பெற்றுச் செல்லவேண்டும்" என்று அறிவிப்பு செய்தாள்.

அண்டை அயலில் உள்ள நாட்டின் இளவரசர்கள் ஒவ்வொருவராய் வந்து ஞானவல்லியான மெகர்பானுவின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் கசையடிகளைப் பெற்றுத் தலை கவிழ்ந்து சென்றார்கள்.

ஐந்தமா என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அகம்மது ஷா என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தார். அவர் பெயர் அப்பாஸ். அவரும், இளம் வயதினராக கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்.

ஞானவல்லி மெகர்பானுவின் அறிவிப்பைக் கேள்விப்பட்டு, 'அப்பாஸ்' இளவரசர், ஞானவல்லியின் ஞானக் கேள்விகளுக்கு விடையளிக்க முன் வந்தார். குறிப்பிட்ட நேரத்தில், தர்க்க மண்டபத்தில் சான்றோர்களும் அறிஞர்களும் ஆர்வத்துடன் கூடினர். ஞானவல்லி மெகர்பானு தோழியர்கள் புடைசூழ, தர்க்க மண்டபத்தில் தனக்குரிய இடத்தில் தலைக் கனத்துடன் வந்தமர்ந்தாள். அப்பாஸ் என்ற இளவரசரும் தர்க்க மண்டபத்தில் தனக்குரிய இடத்தில் வந்தமர்ந்தார். அறிஞர் பெருமக்கள் சிலர் நடுவர் பொறுப்பை ஏற்க, 'மசாலா' நிகழ்வு ஆரம்பமானது.

மெகர்பானு வழக்கமான தனது முதல் கேள்விக் கணையைத் தொடுத்தார்.

"நீர் யார் மகன் காணும்?
உம்மை யார் வளர்த்தது?
என்று சொல்லாவிட்டால்
சொல்வேன் உமை நானும் !"

ஞானவல்லியின் அலட்டலான மசாலாவிற்கு (கேள்விக்கு) அப்பாஸ் இளவரசர் அமைதியாக,

"அடி ஞானப் பெண்ணே! – என்னைக்
கொல்வேன் என்று சொன்ன
குங்குமச் சந்தனமே! – நான்
"ஆதம்" மகன் தானடி! – என்னை
அந்த "அல்லாஹ்" வளர்த்தானடி – உன்னைச்
சொல்லால் வெல்லத் தாண்டி.."

என்று பதிலளித்தார். இறைவன் ஆதம் என்ற மனிதனைத் தான் முதன் முதலில் படைத்தான். 'ஆதம்' என்ற ஆதி மனிதனில் இருந்த இந்த மானுடம் தழைத்தது என்ற கருத்தை 'ஆதம் மகன் தானடி' என்ற பாடல் வரி விளக்குகிறது.

ஞானவல்லி தனது அடுத்த கேள்விக் கணையை எடுத்துத் தொடுத்தாள். .

"மானிலேயும் பெரிய மான்.
அறுபடாத மான் அது என்ன...?
மீனிலேயும் பெரிய மீன்
அறுபடாத மீன் அது என்ன...?
மாவிலேயும் நல்ல மாவு
இடிபடாத மாவு அது என்ன...?"

உடனே தயக்கம் ஏதும் இல்லாமல் இளவரசர் அப்பாஸ்,

"மானிலேயே பெரிய மான்
அறுபடாத மானானது – அது
ஈமானடி ஞானப் பெண்ணே!
மீனிலேயும் பெரிய மீன்
அறுபடாத மீனானது – அது
ஆமீனடி மெகர்பானே..!
மாவிலேயும் நல்ல மாவு
இடிபடாத மாவும் ஆனது – அது
"கலிமா" தானடி கண்ணே !"

என்று பாட்டாலேயே பதில் சொன்னார்.

(ஈமான் – [illegible] இஸ்லாமியன் என்று உறுதி கொள்வது.

ஆமீன் – 'ஆம்' என்று ஆமோதித்து இறை வசனத்தை ஏற்றுக் கொள்வது.

கலிமா – இம்மந்திரத்தைச் சொல்வதே முஸ்லீம்களின் முதல் கடமையானது.)

கேள்விக்கணைகளுக்கு உடனுக்குடன் சற்றும் யோசிக்காமல் 'டாண்,டாண்' என்று பதில் சொல்லும் அப்பாஸ் இளவரசரின் அறிவுக் கூர்மையைக் கண்டு திகைத்த ஞானவல்லி மெகர்பானு. அடுத்து மிகவும் தேர்ந்தெடுத்த மசாலா ஒன்றை எடுத்து சபை முன் வைத்தாள்.

"ஆதத்துடைய மக்களுக்கு
அல்லா படைத்தான்
ஐந்து வீடுகள் – அந்த
ஐந்து வீடுகளின் பெயரை
அவையோர்கள் அனைவரும்
அறியும் படி சொல்லவும் மன்னா...!"

ஞானவல்லியின் மசாலாவைக் கேட்ட அப்பாஸ் அரசர்,

"கேளடி, கிளி மொழியே...
ஆதத்துடைய மக்களுக்கு
அல்லா படைத்தளித்த –
ஐந்து வீடுகளின் பெயர்களை !
முதல் வீடு தகப்பன் வீடு!
அடுத்த வீடு தாய் வீடு!
அருளான "கரு" வீடு!
மூன்றாம் வீடு "துன்யா"
நான்காம் வீடு "கப்ரு"
ஐந்தாம் வீடு மறுமை."

என்றார்.

'தகப்பன் வீடு' என்றது. ஆதியில் கரு வித்தாகத் தகப்பனின் உதிரத்தில் இருந்தது. 'துன்யா' என்பது இந்த உலகம். 'கப்ரு' என்பது முஸ்லீம்களை அடக்கம் செய்யும் மண்ணறை. மறுமை என்பது சொர்க்கம் அல்லது நரகத்தைக் குறிக்கும். மறு உலகம். இதைத் தமிழ் மரபும் 'வீடு' என்றும் 'வீடு பேறு' என்றும் குறிப்பதை இந்த இடத்தில் நாம் எண்ணிப் பார்க்கலாம். (அறம், பொருள், இன்பம், வீடு).

அப்பாஸ் இளவரசர் அசராமல் தன் 'மசாலா'க்களுக்கு பதில் சொல்வதைக் கேட்டு தன் மனதிற்குள் அவரின் அறிவை ரசித்த ஞானவல்லி மெகர்பானு என்ற இளவரசி தனது அடுத்த மசாலாவை அவிழ்த்து விட்டாள்.

நெத்தி படாத தொழுகை என்ன?
நேரமில்லாத பாங்கு என்ன?

அப்பாஸ் இளவரசர் அசராமல், ஞானவல்லியின் அந்தக் கேள்விகளுக்கும் விடை சொன்னார்.

"அடி, ஞானப்பெண்ணே.
நெத்திபடாத தொழுகை – அது
"ஜனாசா" தொழுகை.
நேரமில்லாத பாங்கு – அது
பேறுகால வீட்டுப் பாங்கு..."

ஞானவல்லி தொடர்ந்து தளராமல் தன் மசாலாக்களை அள்ளி வீசினாள்.

"கத்திபடாத கறியும் என்ன?
காலம் தவறிய நகராவும் என்ன?"

அப்பாஸ்,

"கத்தி படாத கறியானது – அது
பறவையிட்ட முட்டை.
காலம் தவறிய நகரா – அது
மௌத்தை அறிவிக்கும் ஓசை.."

என்று உடனுக்குடன் தயங்காமல், மயங்காமல் பதில் கூறினார்.

ஐவேளைத் தொழுகையின்போதும், உக்கார்ந்த (ஸஜிதா) நிலையில் இருந்தபடி முன்புறம் கவிழ்ந்து, தலை தாழ்த்தி, நெற்றி தரையில் அல்லது தரைமேல் விரிக்கப்பட்ட விரிப்பில் (பாய் அல்லது ஸல்லா துணியில்) படும்படி தொழுவார்கள். ஆனால், இறந்தவர்களை அடக்கம் செய்யும் முன் தொழுகிற தொழுகையின் போது (ஜனஸா தொழுகையின்போது) மட்டும் நின்ற நிலையில் தொழுவார்கள்.

ஐவேளையும் பாங்கு சொல்வது குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே நடைபெறும். ஆனால் அந்த ஊரில் இஸ்லாமிய மக்கள் குடியிருக்கும் வீடுகளில் (ஜமாத்தில்) குழந்தை பிறந்தால், உடனே அப்போது ஒரு பாங்கு சொல்லி அதன்மூலம் குழந்தை பிறந்த செய்தியை அக்கம் பக்கத்தில் வசிக்கும் மக்களுக்குத் தெரிவிப்பார்கள்.

மோதினார், ஒரு மந்திரத்தை (அல்லாஹ் அக்பர்) சொல்லி அறுத்த ஆடு, ஒட்டகம், மாடு, கோழி, முயல் முதலியவற்றின் கறியைத்தான் (ஹலால் செய்யப்பட்டது) இஸ்லாமியர்கள் புசிப்பார்கள். ஆனால் கோழி முட்டை, வாத்து முட்டை போன்றவற்றை உடைக்கும்போது மட்டும் அதற்கு விதிவிலக்கு உண்டு. என்றாலும் முட்டைகளைச் சமையலுக்காக (பொரிக்க) உடைக்கும் போது,

"பிடிக்கச் சிறகில்லை,
அறுக்கக் கழுத்துமில்லை,
எனவே உடைக்கிறேன்.
உனக்கும் எனக்கும்
வழக்கும் இல்லை!"

என்று சொல்லுகிற இஸ்லாமிய நாட்டார் நம்பிக்கை ஒன்றும் கிராமாந்தரங்களில் நடப்பில் உள்ளது. ஐவேளையும் தொழுகைக்கான பாங்கோசைக்கு முன் பள்ளிவாசலில் உள்ள 'நகரா' என்ற தோல் கருவியை மோதினார் அடித்து ஓசை எழுப்பி, தொழுகைக்கு ஆயத்தமாகுங்கள் என்று அறிவிப்பு செய்வார். ஊரில் யாராவது இறந்துவிட்டால் (மௌத்து நிகழ்ந்துவிட்டால்) அந்த 'மௌத்து'ச் செய்தியை அறிவிப்பதற்காக, இடைப்பட்ட நேரத்தில் (தொழுகை நேரம் தவிர்த்து) நகராவைத் தொடர்ச்சியாக அடித்து இந்த ஊர் ஜமாத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டார் என்ற செய்தியை ஊர் மக்களுக்கு அறிவிப்புச் செய்வார்கள். தொழுகை நேரமற்ற நேரத்தில் நகரா ஒலிக்கும் ஓசை ஊர் மக்களுக்கு 'ஜமாத்' சேதியை அறிவிக்கும்!

ஞானவல்லி மெகர்பானுவின் மசாலாக்களுக்கு உடனுக்குடன், திகைக்காமல் பதில் அளிக்கும் அப்பாஸ் இளவரசரின் புலமையைக் கண்டு, தர்க்க மண்டபத்தில் இருந்த அறிஞர்கள் ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.


சபையோர்கள், ஞானவல்லியைப் பார்த்து "ம் அடுத்த மசாலாவைப் போடுங்கள்" என்று கூறினார்கள்.

இளவரசி, தனது அடுத்த மசாலாவை எடுத்து அவை முன் வைத்தாள் ராகத்தோடு,

"மரத்துக்குள்ளே... ஒரு பூப்பந்து – அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்சல் குரு



குடத்துக்குள்ளே காய் காய்த்தது — அந்தக்
காயானது பழமும் ஆனது — பின்
கனிந்ததுமே கீழே விழுந்தது.
கீழே விழுந்த கனி, மாங்கனியல்ல
திகட்டாமல் தித்திக்கும் கனி.
அந்தக் கனி.. என்ன கனி..?

அப்பாஸ் அரசரே... இப்போதே செப்பும் பார்ப்போம்! " என்று பாடினாள்.

இளவரசர் அந்த மசாலாவுக்கும் தனது மதி நுட்பத்தால் அருமையாக விடையளித்தார்.

"விளையாட்டுக் கதைபோட்டு
வெற்றி பெற நினைக்கும்
மெகர்பானே! ஞானப்பெண்ணே!
திகட்டாமல் தித்திக்கும் கனி
இப்புவியில் பிள்ளைக் கனி...!"

என்று மசாலாவுக்கு உரிய புதிரை விடுவித்தார் எனத் தொடர்கிறது.

நூறு மசாலா என்ற பக்கீர்கள் பாடும் வசனம் இடை இட்ட கதைப்பாடல்.


மரம் என்பது மனிதன் (ஆண்) அவனுக்குள் சுழலும் பூப்பந்து. விந்தாகும். குடத்திற்குள் காய் என்பது கர்ப்பப்பையில் இருக்கும் குழந்தை. காய் கனியாவது. பத்துமாதம் நிறைந்த பின் பிரசவமாகி, குழந்தை பிறப்பது. இப்போது ஞானவல்லி போட்ட மசாலாவின் பொருள் வாசகர்களுக்கும் புரியும் என்று நினைக்கிறேன்.

இவ்வாறாக மூன்று நாட்கள் மசலா மணி மண்டபத்தில் அப்பாஸ் அரசருக்கும், மெகர்பானு வல்லிக்கும் நடைபெற்ற போட்டியில் அப்பாஸ் அரசர் வெற்றிபெற்று மெகர்பனுவை மணம் முடிக்கிறார்.

இவ்விதமாக ஃபக்கீர்கள் நூறு மசலா என்ற பாடல் மூலமாக இஸ்லாமியச் சமயக் கடமைகளையும், கோட்பாடுகளையும் மக்களுக்கு எளிய முறையில் விளக்குகின்றனர்.

பக்கீர்கள் என்ற கலையாளர்களிடம் வாய் மொழித் திரளாக இதுபோன்ற எண்ணற்ற கதைப் பாடல்கள் உள்ளன. நான் மேலே தந்தது ஒரு மாதிரிதான். அவைகளை எல்லாம் குறுந்தகடுகளில் பதிவு செய்யலாம் அல்லது எழுத்துப் பிரதிகளாகப் பதிப்பிக்கலாம்.

தர்ஹாக்களை மையமாகக் கொண்டு சுற்றிச் சுழலும் இத்தகைய பிரதிகளை. நவீன இஸ்லாமிய மார்க்க சுத்திகரிப்புவாதிகள் அலட்சியக் கண் கொண்டு பார்க்கிறார்கள். இப்பிரதிகளை அழிந்துவிடாமல் பாதுகாத்தால் தமிழ் இலக்கிய உலகுக்கு அருமையான இலக்கியச் செல்வங்கள் கிடைக்கும் என்று நம்பு கிறேன்.



கழனியூரான்

நன்றி :
உயிரோசை,

"ஏன்ய்யா அவனை தூக்குல போட்டாங்க"
"அவன் செஞ்ச காரியம் அப்படி"
"என்ன செஞ்சான்?"
"பாராளுமன்றத்தை தாக்கியவர்கள் ஒளிஞ்சுக்க இடம் கொடுத்தான்"
"அவன் தான் கொடுத்தான்னு நிச்சயமா தெரியுமா?"
"அப்படித்தானே விசாரணையை முடிச்சுட்டு அறிவிச்சாங்க"

அது சரி. அப்சல் குருவுக்கும் பாராளுமன்றத்தை தாக்கிய தீவிரவாதிகளுக்கும் தொடர்பே இல்லையென்றெல்லாம் பேச வேண்டாம். தொடர்பு இருந்ததாகவே இருக்கட்டும். ஆனால் பூனை மூடுவது போல கமுக்கமாக நிறைவேற்றப்பட்ட இந்த தண்டனையால் அரசாங்கம் சாதித்தது என்ன என்பதுதான் குழப்பமாக இருக்கிறது. ஒரு குற்றவாளிக்கு அளிக்கப்படும் தண்டனையானது அவன் திருந்துவதற்கு வாய்ப்பளிப்பதாக இருக்க வேண்டும் அல்லது மற்றவர்களுக்கு பயமுண்டாக்குவதாக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

தூக்குதண்டனை நிச்சயமாக குற்றவாளி திருந்துவதற்கு இடம் அளிக்கப்போவதில்லை. செத்த பிறகு எங்கே திருந்துவது? தொலையட்டும். தூக்கு தண்டனைகள் குறைந்தபட்சம் மற்றவர்களுக்கு பயம் உண்டாக்குகிறதா? பயம் உண்டாகாமல் இருக்குமா என்ன?

இந்த தூக்கு தண்டனையால் எல்லைக்கு அப்பால் இருக்கும் தீவிரவாதிகள் பயந்து தங்களின் பேண்ட்டோடு சிறுநீர் கழிப்பதாக உளவுத்துறை கண்டு பிடித்திருக்கிறதாம். தெரியாத்தனமாக இந்தியாவிற்குள் நுழைந்துவிட்ட தீவிரவாதிகள் நிலை பற்றி சொல்லவே தேவையில்லை. தொடை நடுங்கிக் கிடக்கிறார்களாம். எல்லாவற்றிலும் உச்சமாக, இன்னும் பதினைந்து நாட்களில் இந்த தேசத்தில் குற்றச் செயல்கள் முற்றாக நின்றுவிடும் என்று அணு விஞ்ஞானி இன்று அறிவிக்கப் போகிறாராம்.

அட போங்க சார். ஒரே ஒரு உயிர்தான் போயிருக்கிறது. ஒற்றை உயிருக்காக அருந்ததிராயில் ஆரம்பித்து வினவு வரைக்கும் ஏன் இப்படி குதிக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் அடையாளம் தெரியாத வாகனங்களால் அடித்துக் கொல்லப்படும் மனிதர்களின் எண்ணிக்கை இந்த நாட்டில் பல நூறுகள் இருக்கக் கூடும். கொலை செய்யப்படுபவர்கள், நீருக்குள் மூழ்கி இறப்பவர்கள், ஷாக்கடித்து செத்தவர்கள், கீழே விழுந்து ஆயுளை விட்டவர்கள் என்றெல்லாம் கணக்கெடுத்தால் ஒரு நாளைக்கு பல ஆயிரம் இறப்புகள் பட்டியலில் வரும். ஆயிரக்கணக்கான உயிர்களில் அப்சல் குருவும் ஒரு உயிர்தானே என்று அசால்ட்டாக விட்டுவிடாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பாருங்கள் அவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டால் இந்தக் கொலையில் அரசாங்கம் கை நனைத்திருக்கிறது என்கிறார்கள். அதுவும் சரியாகத்தானே படுகிறது. அரசே கொலை செய்யலாமா? என்று அவர்கள் கேட்பதிலும் நியாயம் இருக்கிறது. ஆனால் அதற்கும் நம்மிடம் பதில் இருக்கிறது. அரசாங்கம் சும்மாவா கொன்றது? இந்திய தேசத்தின் மதிப்பு வாய்ந்த கட்டடமான பாராளுமன்றத்தையே தாக்கியிருக்கிறார்கள். தூக்குதண்டனை கொடுக்காமல் வாழை இலை போட்டு விருந்து வைக்கலாமா என்று நாம் கேள்வி எழுப்பலாம்.

அருந்ததி ராய் என்னவோ சொல்லிவிட்டு போகட்டும். என்னைக் கேட்டால் விருந்து வைக்க வேண்டாம். அதே சமயம் தூக்கிலும் போட வேண்டாம் என்று சொல்வேன். யாரும் கேட்காமலேயே கருத்துச் சொன்னால் கூடவே ஒரு Justification கொடுக்க வேண்டும் என்பது நியதி. அதையும் கொடுத்துவிடலாம்.

குற்றங்களில் பெரும்பாலும் ஆயளவநச ஆனைெ தப்பித்திருப்பார்கள். மற்றபடி ஒளிந்து கொள்ள இடம் கொடுத்தவன், பேட்டரி வாங்கிக் கொடுத்தவன், ஒண்ணுக்கு போகும் போது டார்ச் அடித்தவன் என்ற காரணங்களைக் காட்டி இபிகோ 120 இல் ஆரம்பித்து அத்தனை வகைகளிலும் வழக்கை போட்டு கோர்ட்டில் நிறுத்திவிடுகிறார்கள். குற்றவாளியே தனது குற்றங்களை ஒத்துக் கொண்டான், ஒத்துக் கொண்டதும் இல்லாமல் அவனே கையெழுத்தும் போட்டிருக்கிறான் என்று போலீஸ்காரர்கள் தங்கள் சட்டை காலரை தூக்கி விட்டுக் கொள்வார்கள்.

அவ்வளவுதான். ஜோலி முடிந்தது என்று நினைத்துக் கொள்ளலாம். பிறகு அந்த நான்கு சுவர் களுக்குள்ளும் குற்றவாளி என்ன கதறினாலும் செய்தித்தாள்களில் வரும் செய்திகளை கொடுப்பது உளவு அமைப்புகள்தான். அதிகார வர்க்கம் ஒருவனை குற்றவாளி ஆக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் தினத்தந்தி போன்ற செய்தித்தாள்கள் "அவன் குற்றவாளிதான்" என்பதை வெகுஜன மனதில் பதிப்பதற்கான அத்தனை ஒத்து ஊதுதலிலும் ஈடுபடுகின்றன.

பொதுமக்களிடம் "கொல்லுங்க அவனை" என்ற மனநிலையை உருவாக்குவதற்கு டம்மி பீஸ் செய்திதாள்களையும், செய்தி நிறுவனங்களையும் அரசாங்கத்தின் கைப்புள்ளைகளான உளவு அமைப்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன. பெருவாரியான மக்கள் இந்தச் செய்திகளை எந்தக் கேள்வியும் இல்லாமல் ஏற்றுக் கொள்கிறார்கள். இந்த பெருவாரியான மக்கள்தான் 'தேசத்தின் மனசாட்சி'. இந்த மனசாட்சி எதை விரும்பவேண்டும் என்பதையும் கூட அரசாங்கமும், உளவு அமைப்புகளுமே நிர்ணயம் செய்வதுதான் மாபெரும் ஜனநாயக நாடான நம் தேசத்தின் பெருந்துக்கம். இப்படி உருவாக்கப்படும் "தேசத்தின் மனசாட்சி" எதை விரும்புகிறதோ அதை இம்மிபிசகாமல் முடித்து வாக்குகளாக"ழடயசணைந செய்துகொள்கின்றன அரசியல் கட்சிகள்.

"சின்மயிகிட்ட ரகளை பண்ணினா ஜெயிலில்தான் போடுவாங்க" என்பதில் ஆரம்பித்து "சாவட்டும் பாகிஸ்தானி" என்பதுவரை அத்தனையும் அரசாங்கத்தின் கண்ணசைவில் உருவாக்கப்படும் மனநிலைதான்.

அப்சல் குரு நிரபராதி என்று சொல்லவில்லை. ஆனால் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தங்கள் தரப்பு நியாயத்தை சமூகத்திடம் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. குற்றவாளிகள் மீதான குற்றங்கள் குசயஅந செய்யப்படும் போது வுசயளியசநஉெல இருப்பதில்லை. வழக்கு விவரங்களும், கோர்ட் நடவடிக்கைகளும் வெளிப்படையாக அலசப்படுவதில்லை என பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த குறைபாடுகள் அனைத்தையும் குற்றவாளிக்கு ஆதரவானதாக காட்டலாம். ஆனால் அப்படி காட்டினால் மட்டும் அடுத்த மாதம் இந்த நடைமுறைகளில் மாறுதல் வந்துவிடப்போகிறதா என்ன?

இந்துத்துவ வாக்குகளை ஒரு குவியத்தில் கொண்டு வரும் பிஜேபியின் முயற்சியை தகர்க்கும் காங்கிரஸின் தந்திரம்தான் வரிசையான தூக்கு தண்டனைகள் என்ற குறிப்பு ஒன்றை வாசிக்க நேர்ந்தது. அது உண்மையாக இருக்காது என நம்புகிறேன். நம்புவதுதான் எனக்கு பாதுகாப்பும் கூட. அப்படி நம்பாமல் அரசாங்கத்தை எதிர்த்து பேச எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? இந்த அரசாங்கம் அம்மா போன்றது. தன் பிள்ளைகளுக்கு எது தேவையோ அதை மட்டும்தான் செய்யும். அப்படித்தான் இதையும்....

வாழ்க இந்தியா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் மகா அலெக்ஸாண்டர்

2350 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவின் மாசிடோனியா மாநிலத்தில் பிறந்தவர் மாவீரர் மகா அலெக்ஸாண்டர். இவர் வாழ்ந்த காலம் கி.மு:356-323 ஆகும். கிரேக்க வீரர் மகா அலெக்ஸாண்டர் தனது மத்திம வாழ்வின் துவக்கத்தில் 32 ஆம் வயதில் நோய்வாய்ப்பட்டுக் காலமானார்.

பதினெட்டு வயது முதல் அவரது அபாரப் போர்த்திறமை வெளிப்பட்டு, அந்தக் குறுகிய காலத்திலே சீரான கிரேக்கப் படையைத் தயாரித்து வட ஆபிரிக்கா, மத்தியாசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் வட இந்தியா வரை சென்று வெற்றிக்கொடி நாட்டிக் கடல் வழியாக முதன் முதலில் மீண்டு மத்தியாசியாவை அடைந்தவர்.

பெரும் படை வீரரை மட்டும் கொண்டு செல்லாது, அலெக்ஸாண்டர் தன்னுடன் விஞ்ஞானிகள், தளவரையாளிகள் [Surveyors] ஆகியோரையும் அழைத்துச் சென்று, பூகோள வரைப்படம், காலநிலை, நாட்டின் வரலாறு, கலை, கலாச்சாரம் போன்றவை பதிவு செய்தார். அதே சமயம்



ஐரோப்பிய கிரேக்க நாகரீகம், கலைகள், கலாச்சாரம் பற்றி அந்த நாடுகளும் அவரது படையெடுப்புக்குப் பிறகு முதன்முதல் அறிந்து கொண்டன.

பிளாட்டோவின் [கி.மு.427-347] சீடரான அரிஸ்டாடிலே [கி.மு.384-322] அலெக்ஸாண்டரின் போதகக் குரு. கி.மு. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க இதிகாசக் கவி ஹோமர் அலெக்ஸாண்டரின் அகப்பேரொளி [Inspiration], தந்தையாரின் வாரிசாய்ப் பெற்ற, தளர்ந்து போன கிரேக்க நாட்டைப் பன்மடங்கு பெரிதாக்கி, அன்னிய நாடுகளில் கிரேக்கரின் கலாச்சாரத்தை முதன்முதல் விதைத்தார். அவர் கைப்பற்றி விரிவாக்கிய நாட்டுப் பரப்பு எகிப்து முதல் வட இந்தியா வரை பரவியது. வென்ற தளத்தில் எல்லாம் அலெக்ஸாண்டர் தன்பேரில் புதுப்புதுப் பெயர்களை வைத்தார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அவர் எகிப்தில் அடிக்கல் நாட்டிய அலெக்ஸாண்டிரியா நகரம், காலவெள்ளம் அடித்துச் செல்லாது அவரது தீர வரலாற்றை இன்னும் முரசடித்துக் கொண்டிருக்கிறது!

ஆசிய அதிபதி மகா அலெக்ஸாண்டர்

கி.மு. 338ல் கிரேக்கருடன் போரிட வைத்து

அலெக்ஸாண்டரின் தந்தை இரண்டாம் பிளிப் [Philip II] தனித்தனியாக ஆண்டுவந்த மாஸிடோனியன் குடிவாசிகளின் பகுதிகளையும், மற்ற நகரங்களையும் சேர்த்து ஓர் ஐக்கிய மாசிடோனியாவாக ஆக்கினார். ஆனால் அப்போது 20 வயதான அலெக்ஸாண்டருக்குத் தந்தை செய்த அவ்வினைப்புப் போதுமானதாகத் தெரியவில்லை! கி.மு. 336ல் அலெக்ஸாண்டர் அரசராக முடிசூடினார். மாபெரும் கிரேக்க இதிகாச வீரர்களான ஹெர்குலிஸ், அக்கிலிஸ் [Hercules, Achilles] பரம்பரையில் வந்ததாக பெருமையுடன் கூறிவந்த அலெக்ஸாண்டர் அவர்களைப் போன்று தானும் தன் தனது பராக்கிரமத்தை உலகில் காட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்.

கி.மு. 334ல் அலெக்ஸாண்டர் திறமையுடன் 30,000 கிரேக்கப் படையினரை அணிவகுத்து, உணவு, உடை, வாகனம், வசதி அளித்து ஹெல்லெஸ்பாண்ட் [Hellespont (Gallipoli)] தளமுனையைக் கடந்து பெர்ஸியா [Persia] நாட்டின் உள்ளே நுழைந்தார். தனது போர்த் தந்திரத்தாலும், கனிவுக் கவர்ச்சியாலும் கிராகஸ் நதியைக் கடந்து போரிட்டு, லெபானின் டையரையும் [Granicus (Goneri) River to Tyre (Beirut Lebanon)] அடுத்துக் கைக்கொண்டு, எகிப்தைப் பிடித்தார். அதாவது முதல் மூச்சிலேயே தனது பராக்கிரமத்தில் கிழக்கு மத்தியதரைப் பகுதிகளைக் கைப்பற்றித் தன் வெற்றிகளை நிலைநாட்டினார். கி.மு. 331ல் பெர்ஸிய மன்னன் மூன்றாம் டாரியஸ் [Darius III] மூர்க்கப் படைகளை கௌகமேலா [Gaugamela (Tabriz, Iran)] என்னுமிடத்தில் முறியடித்து, பெர்ஸிபோலிஸ் அரண்மனைக்குத் [Persepolis] தீவைத்து 150 ஆண்டுகளுக்கு முன்பு பெர்ஸியா மன்னன் கிரேக்கரின் அக்ரபோலிஸ் [Acropolis] நகரைத் தீவைத்து அழித்த கோரத்திற்குப் பழிவாங்கிக் கொண்டார்.

"ஆசிய அதிபதி" [Lord of Asia] என்று தன்னைப் பீற்றிக் கொண்டு, அலெக்ஸாண்டர் காடு, மலை, பாலைவனம் கடந்து, கடும் மழை, வெப்பம் தாங்கிக் கொண்டு ஆப்கானிஸ்தானில் உள்ள ஹிந்துகுஷ் மலைத் தொடர்களைத் தாண்டி, எதைப் பற்றியும் அறியாத பிரதேசங்களில் துணிவாகப் படைகளுடன் கால்வைத்தார். ஐந்து நதிகள் பாயும் சிந்து சமவெளிப் பரப்பில் அலெக்ஸாண்டர் நுழைந்து இந்திய மன்னன் புருஷோத்தமனைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். வென்ற நாடுகளில் எல்லாம் தன் பெயரில் 32 புதிய நகரங்களுக்கு அலெக்ஸாண்டிரியா எனப் பெயரிட்டார். இறுதியாக ஹைபஸிஸ் நதிக் கரையில் [Hyphasis (Sutlej River)] கிரேக்கப் படையினர் களைத்துப் போய் அடுத்துப் போரிட மறுத்தனர். பிறகு சிந்து நதித் தீரத்தில் தென்புறம் நடந்து படாலா [Patala] வழியாக அரபிக்கடலை அடைந்து படகுகளில் பெர்ஸின் வளைகுடா கடந்து பாபிலோனை [Babylon] வந்து சேர்ந்தார் என்று அறியப் படுகிறது. கி.மு. 323லட பாபிலோனில் அலெக்ஸாண்டர் தனது 32 ஆம் வயதில் நோய்வாய்ப்பட்டுக் காலமானார்.



அலெக்ஸாண்டரின் குரு மாமேதை அரிஸ்டாடில்

கிரேக்க நாட்டின் மாமேதை பிளாடோவின் சீடரான அரிஸ்டாடில் அலெக்ஸாண்டரின் குரு. அரிஸ்டாடில் கி.மு. 384ல் மாசிடோனியாவின் ஆன்ராஸ் குடியேற்றப் பகுதியில் பிறந்தார். அவரது தந்தை பெயர் நிகோமாசெஸ் [Nicomachus]. தந்தை மாசிடோனியா மன்னரின் அரசவை மருத்துவராகப் பணியாற்றினார். தந்தையாரே மகனுக்குக் கல்வி புகட்டியதாகத் தெரிகிறது. சிறுவயதிலே இறந்து விட்டதால், பெட்டிஸ் [Phaetis] என்னும் பெயர் கொண்ட தாயைப் பற்றி எதுவும் வரலாற்றில் தெரியவில்லை. பத்து வயதில் தந்தையும் மரணம் அடைந்த பின், அரிஸ்டாடில் சிறிய தந்தையுடன் வாழ்ந்து வந்தார். தந்தையின் மருத்துவ அறிவு அரிஸ்டாடிலின் சிந்தை விரியத் தூண்டு கோலாய் அமைந்தது. அவர் 18 வயது முதல் 37 வயது வரை பிளாடோவின் பல்கலைக் கழகத்தில் [Plato's Academy] கல்விப் பயிற்சி பெற்றதாகத் தெரிகிறது. அவர் பல்வேறு தலைப்புகளில் [பௌதிகம், உயிரியல், விலங்கியல், அரசியல், தர்க்கவியல், கவிதைக் காவியம்] நூல்கள் எழுதினார். அவற்றில் பல முழுமையாகத் தற்போது கிடைக்கவில்லை. சாக்ரெடிஸ் [கி.மு.470-399], பிளேட்டோ ஆகியோருடன் அரிஸ்டாடிலும் மிக்க செல்வாக்குடைய பூர்வீக கிரேக்க மேதைகளின் பட்டியலில் ஒருவராக மேலாக வீற்றிருக்கிறார். அவர் அனைவரது ஆழ்ந்த வாக்குமொழிகள் மேற்கத்திய வேதாந்தப் படைப்புகளாகக் கருதப்படுகின்றன. பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியோரது ஆக்கப் படைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூர்வீக வேதாந்தச் சாரங்களில் பிரதான நிலையைப் பெற்றுள்ளன.

அரிஸ்டாடிலின் உரையாடல்கள் அவரது மாணவரால் எழுதப்பட்டு நூல்களாய் நிலவின. அவை பௌதிகம், கோட்பாடியல், அரசியல், கவித்துவம், நிக்கோமசென் நெறியியல், தி அனிமா (ஆத்மாவைப் பற்றி) [Physics, Metaphysics (Ontology), Politics, Poetics, Nicomachean Ethics, De Anima (On the Soul)]. அரிஸ்டாடில் தன் காலத்திய அனைத்துத் அறிவுத் தலைப்புகளைப் பற்றிக் கற்ற மிகச்சிலரில் ஒருவராகக் கருதப்படுகிறார். அவர் ஆழ்ந்து அறிந்தவை: உடற்கூறியியல், வானவியல், பௌதிகம், விலங்கியல், நிதி நிலையியல், பூதளவியல், பூகோளவியல், விண்கற்கள், கருச்சினைவியல் [Anatomy, Astronomy, Physics, Zoology, Economics, Geology, Geography, Meteorology, Embryology]. வேதாந்தப் பிரிவுகளில் அரிஸ்டாடில் நெறியியல், கலைநுகர்ச்சி, அரசியல், உளநூல், மதநூல், கோட்பாடியல் [Ethics, aesthetics, Politics, Psychology, Theology, Metaphysics] அறிந்தார்.

பிளாடோவின் மரணத்துக்குப் [கி.மு.347] பிறகு அவருக்குக் கிடைக்க வேண்டிய பதவி, பிளேட்டோவின் உறவினன் ஒருவனுக்கு அளிக்கப்பட்டதால் அவர் கழகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. கி.மு. 342ல் மாசிடோனியா மன்னர் பிளிப்பால் அழைக்கப்பட்டு, அலெக்ஸாண்டருக்குக் குருவாக நியமனம் ஆனார். அப்போது அலெக்ஸாண்டருக்கு வயது 13. கிரேக்க, ரோமானிய வரலாற்றை எழுதிய புளூடார்க் [Plutarch (A.D.46-127)] எழுதியிருப்பதின் மூலம், அரிஸ்டாடில் அலெக்ஸாண்டருக்கு நெறியியல், அரசியல் போதித்ததோடு ஆழ்ந்த வேதாந்த ஞானத்தையும் ஊட்டியதாக அறியப்படுகிறது. பின்னால் அலெக்ஸாண்டர் அரிஸ்டாடிலுக்கு அன்னிய நாட்டுக் கலைத்துவ, வேதாந்த, விஞ்ஞான, வானியல் நூல்களை அளித்ததாகத் தெரிகிறது.

அலெக்ஸாண்டர் போர் முறையில் பின்பற்றிய விதிகள், அபாரப் போர்த் திறம், பராக்கிரமம், வைராக்கியம் ஆகியவற்றுடன் அவர் கையாண்ட போரெடுப்பு நியதிகள், பயன்படுத்திய முறைகள் குறிப்பிடத்தக்கவை என எல்லா வரலாற்றாசிரியர்களும் ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

# சிறந்த திரைப்படமாக 'ஆர்கோ'வுக்கு ஒஸ்கார் விருது



ஈரான் இஸ்லாமிய புரட்சி தொடர்பாக எடுக்கப்பட்ட ஹொலிவூட் திரைப்படமான 'ஆர்கோ' சிறந்த திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருதை வென்றுள்ளது. 85 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் வைபவம் லொஸ் ஏஞ்சல்ஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் சிறந்த நடிகருக்கான விருதை 'லிங்கன்' படத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனின் பாத்திரத்தை ஏற்று நடித்த டானியல் டே லுவிஸ் வென்றார். இதன் மூலம் அவர் மூன்று தடவைகள் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதை வென்ற முதல் நடிகராக சாதனை படைத்தார். இதற்கு முன்னர் 55 வயதான டே லுவிஸ் 1990 இல் 'மை லைப் பூட்' மற்றும் 2008 'தெயார் வில் பி பிளட்' படத்தில் நடித்ததற்காக ஒஸ்கார் விருதை வென்றிருந்தார்.

கடந்த 1979 இஸ்லாமிய புரட்சியன்போது ஈரானில் சிக்கிக்கொண்ட அமெரிக்க இராஜதந்திரிகளை அங்கிருந்து மீட்டுவரும் சி.ஐ.ஏ. திட்டத்தை கதையாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படமான 'ஆர்கோ' சிறந்த திரைப்படமாக விருதுபெற்றது.

தீர்ந்தது ஹலால்..............1ம் பக்கத் தொடர்ச்சி



இருப்பதால் அவர்களுக்குத் துணைபுரியும் நோக்குடனேயே ஹலால் சான்றிதழ் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது என்றும் அதில், இலாபம் பெறுவது உட்பட வேறு எந்த உள்நோக்கமும் கிடையவே கிடையாது என்றும் இடைவிடாது நாம் கூறிவரும் நிலைப்பாட்டை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம் என்றார்.

ஹலால் சான்றிதழ் மூலம் பெறப்படும் பணம் தீய நோக்கங்களுக்காக செலவிடப்படுவதாக சிலரால் கூறப்படும் குற்றச் சாட்டுக்கள் முற்றிலும் அடிப்படையற்றவை என்று திட்டவட்டமாக மறுக்கின்றோம். மாறாக நம்மிடம் ஹலால் சான்றிதழைப் பெறுவதற்கு ஒப்பீட்டு அடிப்படையில் மிகச் சிறியதொரு கட்டணத்தையே செலுத்தவேண்டும். அதன் காரணமாகவும், அதன் ஒளிவுமறைவற்ற முறைமை காரணமாகவும், நிறுவனங்கள் பெறக்கூடிய பொருளாதார நன்மை மிகவும் பாரியதாகும். மேலும் இச்சான்றிதழ் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த மிக அவசியம் என்ற அடிப்படை உண்மைகளை உற்பத்தி நிறுவனங்கள் உணர்ந்துள்ளன. அதன் காரணமாக அவை தாமாக முன் வந்து ஹலால் சான்றிதழை பெறுகின்றன என்பதே உண்மை நிலையாகும் என்றும் வலியுறுத்திக் கூறப்பட்டது.

அதே நேரம், அரசாங்க நிறுவனமொன்றிடம் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையைக் கையளிப்பது சிறந்தது எனவும் கலந்துரையாடல்கள் மூலம் ஹலால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே சிறந்தது எனவும், 23 பெப்ரவரி 2013 சனிக்கிழமை தம்மைச் சந்திக்க வந்த முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் பிரதிநிதிகளிடம் மல்வத்த பீட மஹாநாயக்க தேரர் திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆலோசனை வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"ஹலால் தெளிவானது, ஹறாமும் தெளிவானது இடையில் ஐயத்துக்கிடமான விடயங்கள் இருக்கின்றன. நல்லோர் அவற்றைத் தவிர்ந்துகொள்ளட்டும்" என்ற ஒரு ஹதீஸ் இருக்கின்றது. அதன்பிரகாரம் ஹலால் மக்களுக்கு மிகவும் தெளிவாக அறியக்கூடியதாக இருக்கின்றது. இடையில் ஐயத்துக்கு இடமான விடயங்களை மக்கள் தாமாக தீர்மானித்து அவற்றிலிருந்து தவிர்ந்துகொள்ளட்டும் என்ற வழிகாட்டலில் ஹலால் சான்றிதழ்கள் பெரும்பாலும் ஐயத்துக்கிடமான விடயங்களிலேயே தேவைப்படுகின்றது. சுயாதீனமாக ஹலாலைத் தீர்மானிக்கும் மக்களின் விடயத்தை உலமா சபை எடுத்துக்கொண்டுள்ளது. இது குறித்து முஸ்லிம்கள் தமக்குள் கருத்துத் தெளிவொன்றினை ஏற்படுத்த வேண்டும் என்றும் கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன.

ஹலால் விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் தோன்றிய அசாதாரண நிலைமைகளின் போது அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபை போன்ற மார்க்கத் தலைவர்களின் சபையானது தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக அரசியல்வாதிகளின் பின்னால் அலைந்ததே தவிர மார்க்க அறிஞர்களை அணுகி இந்தப் பிரச்சினை குறித்துப் பேசி அவர்களின் கருத்துக்களை அறிய முற்படவில்லை. அத்துடன் மதரீதியான தலைமைத்துவங்களை இந்தப்பிரச்சினையில் இணைத்துக்கொள்ளவில்லை. எனவே இவ்வாறான சிக்கல்கள் நிறைந்த ஒரு சூழலில் ஜம் இய்யதுல் உலமா தனது சரியான நிலையினை உணர்ந்து சதிவலைகளில் சிக்கிக்கொள்ளாமல் ஒதுங்கிக்கொள்வதும், முஸ்லிம் சமூகத்தில் நேர்மையாக சிந்திக்கின்ற செயலாற்றுகின்ற புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்களை முதன்மைப்படுத்தி இத்தகைய விவகாரங்களை கையாள்வதும் சிறப்பானதாக இருக்கும் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.

வர்த்தகப் பிரிவில்..............1ம் பக்கத் தொடர்ச்சி

வர்த்தக பிரிவை பொருத்தவரையில் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கென 4583 பேரும், 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கென 4876 பேரும் பல்கலைகழகங்களுக்கு உள்ளீர்க்கப்பட்டனர். 2012 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றியவர்களில் 6471 பேர் வர்த்தக பிரிவில் 3 பாடங்களிலும் ஏ சித்திபெற்றுள்ளனர். கடந்த காலங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் வர்த்தக பிரிவிலிருந்து ஆகக்குறைந்தது 5000 பேர் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குள் உள்ளீர்த்துக்கொள்ளப்படுவர். அப்படியாயின் வர்த்தக பிரிவில் 3 ஏ சித்திபெற்ற ஏனையவர்களின் நிலைமை கேள்விக்குள்ளாகியுள்ளது.

இந்த நிலைமைக்கு தீர்வுகாண்பதற்கு அரச பல்கலைகழகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். 1978 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசாங்க பல்கலைகழகங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. பல்கலைகங்களின் அனுமதி தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் கையெழுத்து வேட்டை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷானா, சவூதி மன்னராட்சி, அமெரிக்கா !

எமது அன்புச் சகோதரியே! உனது சிரசை குருட்டு சவூதி அரசு கொய்த போது உலகின் நாலா திசை களிலிருந்தும் மனித உயிரை நேசித்து மதிக்கும், அராஜகத்திற்கு எதிரான நெஞ்சங்கள் உனது முடிவையிட்டு கண்ணீர் சிந்தின, கடுங் கோபங்கொண்டன. இனம், மதம், தேசம், மொழி, இன்னோரன்ன வேறுபாடுகளைக் கடந்து உனக்கு விதிக்கப்பட்ட அந்த கொடூரமிகு மகாபாதகத்தினை நினைத்து வருந்தின.

ஒரு சிலர், ஒரு சில அமைப்புகள் தமது நலன்களுக்காகவும் தாம் புரிந்து வைத்துள்ள தவறான கற்பிதத்திற்காகவும் உனது கொலையை நியாயப்படுத்தினர். எழுதினர். பேசினர். அவர்களிடம் எஞ்சியிருந்தவை மதம் வலியுறுத்தும் தீர்ப்பு இது என்பதேயாகும். உண்மையில் இந்தக் கொலையை ஷரிஆவின் அடிப்படையில் கூட ஆராயும் போது. விவாதிக்கும் போது உனக்கு இழைக்கப்பட்டது மிகப்பெரும் அநியாயம் என்பதை இஸ்லாமிய மார்க்க அறிஞர்களும் ஏற்றுக் கொள்வர்.

சவூதி அரசின் சட்டங்கள் தொடர்பாகவும், அதற்கும் ஷரிஆ சட்டத்திற்குமுள்ள மிகப்பெரிய தூரத்தையும், இந்த மாயமானையும் அம்பலப்படுத்தவும் தெரிந்து கொள்ளவும் தெளிவு பெறவும், இந்த உலக வெளியில் குறிப்பாக நமது தமிழ் மொழிச் சூழலில் உனது மரணம் இஸ்லாம் தொடக்கம், சமகால உலகளவிய அரசியல் பொருளாதாரம், பண்பாடு வரைக்குமான நிகழ்வுகளை முன் வைத்து பேச எம்மிடம் நிறையவே விடயங்கள் உள்ளன. இவற்றினை இவர்களை நோக்கி எம்மால் கேட்காமல் "கள்ள மௌனம்" காக்க முடியாது என்பது முக்கியமானதாகும்.

ஷரிஆ சட்டம், இஸ்லாமிய ஆட்சிமுறை பற்றி கதைப்பதற்கும் அதில் தன்னை மறைத்துக் கொள்வதற்கும் உலக முஸ்லிம்களுக்கு போலித்தோற்றம் ஒன்றைக் காட்டுவதற்கும் சவூதி மன்னராட்சிக்கு எந்த அருகதையும் இல்லை. மிக நீண்ட காலமாகவே இந்த மன்னராட்சி ஆளும் வர்க்கம், உலகளவில் ஒடுக்கப்படுகின்ற இஸ்லாமிய மக்களுக்கு மட்டுமல்ல, ஒடுக்கப்படுகின்ற அனைத்து மக்களுக்கு எதிராகவும், அவர்களை ஒடுக்குவதற்கும்





சவூதி அரசு ஒரு 'கிலாபத்' அன்று. அங்கு நடைபெறுவது ஜனநாயகம், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகளுக்கு எதிரான ஒரு பிற்போக்குவாத, உலக ஆக்கிரமிப்பிற்கும் கபளீகரத்திற்கும் சுரண்டலுக்கும் துணை போகின்ற மன்னராட்சி. செல்வமும் அதிகாரமும் ஆணவமும் கர்வமும் குடிகொண்ட உலக முஸ்லிம்களின் குருதியை மத்தியகிழக்கு

வழியொன்றை ஏற்படுத்திவிட்டுள்ளது.

இஸ்லாம், உலக அரசியல் கலாசார, பண்பாட்டு நெருக்கடிகள், உலகளவிய அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு போன்றவற்றினை பார்க்கும் பார்வையில் போலி ஆசாடபூதிகள், சவூதி அரசின் விசுவாசம் மிக்க அதன் நலன் பேணுபவர்களுக்கும், இது தொடர்பில் தீர்க்கமான பார்வை கொண்டோருக்கு மிடையேயான கருத்து விவாதத்தினையும் உரையாடலையும் மட்டுமல்ல, வேறுபாட்டையும் உனது மரணமும் அதன் தாக்கமும் கிளர்த்தியுள்ளது.

பதினோழு வயது, வாழ்வை நுகராத வசந்தத்தின் வாசலில் ஒரு "அடிமை வேலைக்காரியாய்" நீ இருந்தாய். ஏழ்மையின் காரணமாய் உன் குடும்பத்தின் வயிற்றுப் பசியை போக்கு வதற்காகவும், உங்களுக்கானதொரு பாதுகாப்பான குடிமனையை ஆக்கிக் கொள்வதற்காகவும் நீ அடிமையாய் அந்த கொடுங்கோலர்கள் ஆட்சிசெய்யும் சவூதி மண்ணுக்கு எந்த வழியுமில்லாமல் சென்றாய். உன்னைப் போய் கொன்றனர் அந்தப்பாவிகள்

அந்த பாவிகளையும் அவர்களது அரசு அதிகாரத்தின் அனைத்து கேடுகளையும், கொடுமைகளையும், சீர்கேடுகளையும் "ஷரிஆ" என்ற விடயத்தினால் மூடிமறைத்து, நியாயமற்ற, கொடுங்கோன்மையான ஏன் உலகளவில் இஸ்லாமிய அரசியலுக்கு, அதன் பொருளாதார சமூக இருப்புக்கு மிகப்பெரும் ஊறாகவும் துரோகமாகவும் செயற்பட்டு வரும் சவூதி மன்னராட்சியின் முகத்தை இஸ்லாத் தின் பெயரால் நியாயப்படுத்தும் இவர்களிடம் கேட்பதற்கு எவ்வளவோ கேள்விகள் எம்மிடம் உள்ளன.



உனது மரணம் முடிந்து விட்டது, அதனை தடுக்கமுடியாத கையாலாகாதவர்களாக நாம் நிராயுதபாணியாக இருந்தோம். ஆனாலும் உனது மரணத்தை நியாயப்படுத்துபவர்களை நோக்கி, அவர்களுடன் வாதம் புரியவும், பக்கபலமாக இருந்து வருகிறது. இஸ்லாத்திற்கு எதிரான சக்தியான அமெரிக்காவுடனும் அதன் நேச நாடுகளுடனும் சவூதி மன்னராட்சி கூட்டணி அமைத்து குடும்பம் நடாத்தி வருவது இன்று நேற்று நடந்தது அல்ல. அமெரிக்க அரசினதும் சவூதி மன்னராட்சி ஆளும் குடும்பத்தினதும் நலன்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. பிரிக்க முடியாதவை என்பதை சர்வதேச அரசியலைப் புரிந்தவர்களுக்கு சொல்லத் தேவையில்லை.

சவூதி மன்னராட்சிக்கும் ஒரு எசமான் இருக்கிறது. அது "எல்லாம் வல்ல இறைவன்" அல்ல, அமெரிக்க அரசுதான் என்பது வெள்ளிடை மலை. மதத்தின் பெயரால் "ஷரிஆ" சட்டவாக்கத்தின் பெயராலும் மக்களுக்கு பூச்சாண்டி காட்டுபவர்கள் இந்த உண்மையை அறியாதவர்கள் அல்ல. அல்குர்ஆனுக்கு பொழிப்புரை சொல்லும் இவர்கள், இன்றைய உலக அரசியல் நிலையையும், இஸ்லாத்திற்கெதிரான, உலகளவில் இஸ்லாமிய மக்களுக்கு எதிரான, ஒடுக்கப்படுகின்ற அனைத்து மக்களுக்கும் எதிரான இந்த உண்மைகளை அறியாமல் இருக்கிறார்கள் என சொல்வதற்கு நம்மால் முடியவில்லை.

தமது நலன்களுக்கு விசுவாசமாய், எசமான விசுவாசத்தின் காரணமாய், சஊதியை மதத்தின் பெயரால், இஸ்லாமிய ஆட்சி என்கிற பெயராலும் அதற்கு கிரீடம் சூட்ட முற்படுகின்றனர்.

தொடக்கம் ஆபிரிக்கா, ஆசியாவரை ஓட்டவைக்கும் அமெரிக்க அரசின் ஒரு கைப்பாவை கட்டாட்சி அரசு அது.

நடந்து கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு போர்கள், பொருளாதார மேலாதிக்கம், எண்ணெய்க்கான யுத்தம், உலக நெருக்கடி, இஸ்லாம் ஒரு பயங்கரவாத மார்க்கம் என்கிற அனைத்து வகை விளைவுகளுக்கும் அமெரிக்காதான் முன்னணிக் காரணம் – இந்த அமெரிக்காவிற்கும் சவூதி மன்னராட்சி குடும்பத்திற்குமிடையே இருக்கும் உறவை தெரியாது என பாசாங்கு செய்பவர்களும், இஸ்லாத்தினை வெறுமனே ஒரு சடங்கு ஆசாரமான மதமாக நிலைநிறுத்தத் துடிப்பவர்களால் மட்டுமே, ரிஷானாவின் கொலையுடன் மட்டுமல்ல, உலகளவில் குருதியோட்டப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களின், முஸ்லிம் அல்லாத ஒடுக்கப்படுகிற மக்களின் கொலைகளைக் கண்டும் காணாமல் சவூதி அரசை நியாயப்படுத்த முடியும்.

பெற்றோலியம் அந்த அரேபிய மண்ணுக்கு கிடைத்த வற்றாத செல்வம் என சொல்பவர்கள் உண்டு. அந்த செல்வத்தினை முன்வைத்தே அமெரிக்க நேரடி, மறைமுக ஆக்கிரமிப்புகளும் கட்டுப்படுத்தல்களும் தொடங்கி, அமெரிக்காவின் தளம் சஊதியில் காலூன்றி நீண்ட காலமாயிற்று. உலகில், அமெரிக்க ஆளும் குடும்பத்தின் மிக நெருங்கிய கூட்டாளி இஸ்ரேல் என்பது ஒரு வெளிப்படையான உண்மைதான். அதேபோல் வெளிப்படையாகவும் மிகமிக இரகசியமாகவும் இஸ்ரேலுக்கு சமமான ஒரு உறவை அமெரிக்கா ஆளும் குடும்பம் சவூதி மன்னராட்சியுடன் வைத்துள்ளது. இரண்டு ஆளும் குடும்பத்தின் உறவும் நலனும் முரண்படுவதற்கான வாய்ப்பே இல்லை எனும் அளவிற்கு இறுக்கமான கட்டு அது. இஸ்ரேல் கூட தனது நிகழ்ச்சி நிரலை முன்னிருத்தி சிலவேளை (இறைமையுள்ள ஒரு நாடு என்கிற வகையில்) அமெரிக்காவுடன் முரண்படும் தருணங்கள் வந்துள்ளன, ஆனால் இந்த அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான சவூதி மன்னராட்சி, அமெரிக்காவின் கிளிப் பிள்ளையாகவே இருக்கும். ஏனெனில் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசிற்கு எந்த தார்மீக நெறிகளும் இல்லை. ஒடுக்கப்படுகின்ற மக்கள் தொடர்பில் எந்த அக்கறையும் இருந்ததில்லை. முழு உலகையும், முழுமத்திய கிழக்கையும் நீ ஆக்கிரமித்து அழித்தொழித்தாலும் சரி, என் மன்னராட்சிக்கு வேட்டு வைக்காது இருந்தால் சரி என்பதுதான் அதன் தாரக மந்திரம்.

கடந்த 60 வருடங்களுக்கு மேலான பலஸ்தீனம் அடங்கலாக மத்தியகிழக்கு நெருக்கடி தொடக்கம், ஆபிரிக்க நாடுகளில் அமெரிக்க தலையீடு, ஆப்கான் யுத்தம், தலிபான் உருவாக்கம் வரை இதனை நாம் காணலாம். அமெரிக்காவின் இந்த அனைத்து ஆக்கிரமிப்பு அழிவுத்திட்டங்களுக்கும் உதவியாகவும் பின் பலமாகவும் செயற்பட்டுக் கொண்டிருப்பது சவூதி மன்னரரசே. அமெரிக்காவின் நீண்டகாலத் திட்டத்தில் எஞ்சியிருப்பது ஈரான் மட்டுமே.

உலகிற்கு ஜனநாயகத்தையும் மக்களாட்சியையும் மனித உரிமையையும் வாரி வழங்க அவதாரம் எடுத்திருக்கின்ற அமெரிக்கா, சவூதி மன்னராட்சியின் கொடுங்கோன்மை பற்றி மெலிதாகக் கூட விமர்சித்தது கிடையாது. இஸ்லாம்தான் அமெரிக்க ஆளும் குழுமத்தின் எதிரியே தவிர சவூதி மன்னராட்சி அன்று. அவர்கள் இஸ்லாத்துடன் இல்லை தம்முடன்தான் என்பதை வரலாற்றில் பலமுறை சவூதி ஆளும் குடும்பம் அமெரிக்காவுக்கு நிருபித்துள்ளது.

பலஸ்தீன மக்களின் தொடர்ச்சியான துயரம் நீடிப்பதற்கு இஸ்ரேலும் அமெரிக்காவும் பிரிட்டனும் மட்டும் காரணமல்ல, சவூதி மன்னராட்சியும் பிரதான பங்குதாரராகும். அன்று இஸ்லாத்தைப் பாவித்து ஆப்கானில் "ரஷ்ய செங்கரடிக்கு" எதிராக? போரினை நடாத்திய அமெரிக்கா, அதே இஸ்லாத்தை ஒரு பயங்கரவாத மார்க்கமாக, சகிப்புத் தன்மையற்ற கொடுங்கோன்மைக் கோட்பாடாக உலகிற்கு சித்தரிக்கும் கருத்தியலையும் பிரச்சாரத்தையும் அமெரிக்கா தான் உருவாக்கியது. அதன் நேச நாடுகளை துணைக்கழைத்து உலகின் அனைத்து மட்டங்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இராணுவரீதியாகவும் இராஜதந்திர வழியிலும் அதனை தொடங்கியது. தொடர்ந்தும் இப்படியான சித்தரிப்பினை நடாத்தியும் வருகிறது. இந்த மிகப் பெரும் எதிரியுடன் அனைத்து வழிகளிலும் கைகோர்த்துக் கொண்டும், கட்டி அணைத்துக்கொண்டும், சஊதியில் இஸ்லாமிய ஆட்சி நடக்கிறது, அங்கு ஷரிஆ சட்டத்தினை அமுல்படுத்துகிறார்கள் என சொல்லி வருவதற்கும், அதனை நியாயப்படுத்தி வருபவர்களுக்கும் ஒரு சவாலான நிலையை இந்த உண்மைகள் ஏற்படுத்தவில்லையா? (அமெரிக்க ஆளும் குழுமத்தினதும் சவூதி மன்னராட்சியினதும் உறவும் நலனும் தொடர்பான ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. இவற்றினை உண்மையில் அறிந்து கொள்ளாதவர்கள் இருப்பின் அவற்றினை அறிந்து கொள்ள முடியும்)

நிறவெறியும், மதவெறியும், ஏகாதிபத்திய அமெரிக்க ஆதிக்கத்தின் பண்பாட்டு ஆயுதங்களாகும். இதனை அமெரிக்க ஆதிக்கம் அரசியல், மத, பொருளாதார சூழலில் தேவையான அளவில், வடிவில் பாவித்துக் கொள்ளும். மத்திய கிழக்கிலும், ஆப்கானிலும் நேரடியான இராணுவப் போரை நடாத்திவரும் அமெரிக்கா, இப்போரை நடாத்த சாத்தியப்படாத பிரதேசங்களில், உள்நாட்டு யுத்தங்களையும், முரண்பாடுகளையும், தீர்க்கப்பட முடியாத மோதல்களையும் உருவாக்குகிறது. தென்னாசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் மத முரண்களை அதிகரிப்பதிலும், நிலமையை சிக்கலாக்குவதிலும் அமெரிக்காவின் பாத்திரம் விசேட கவனிப்புக்குரியது.

எம்-பௌசர்

நன்றி: எதுவரை

# சா/த பரீட்சையில் ஆங்கில செயன்முறை பரீட்சை: பந்துல



கல்விப்பொதுத் தராதர சாதாரணத்தரப் பரீட்சையில் ஆங்கில செயன்முறைப் பரீட்சையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த ஆங்கில செயன்முறை பரீட்சையானது ஆங்கில மொழிப்பரீட்சையின் ஒரு பகுதியாக அமையும். ஆங்கில மொழிப் பரீட்சையில் எழுத்துப் பரீட்சைக்கு 90 புள்ளிகளும் ஆங்கில பேச்சு பரீட்சைக்கு 10 புள்ளிகளும் வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார். அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாதாரண தரத்திற்கு புதிய பாடங்களை அறிமுகப்படுத்தும் திட்டம் ஒன்று இருக்கின்றது. இதன் பிரகாரம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தொழிற்நுட்பம் எனும் பாடத்தொகுதியின் கீழ் தமக்கு விருப்பமான ஒரு தொழிற்நுட்ப பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்யமுடியும்.

இந்த தொழில்நுட்பப் பாடத்தொகுதியில் பொறியியல் விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்களும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# முறையற்ற வகையில் மாணவர்களிடம் பணம் அறவிடும் தொடர்பாக 2616 முறைபாடுகள்




முறையற்ற விதத்தில் மாணவர்களிடம் பணம் அறவிடும் அதிபர் ஆசிரியர்கள் தொடர்பாக ஊழலுக்கு எதிரான குழுவிற்கு 2 ஆயிரத்து 616 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய நிறுவனங்களின் ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கதவுகள், ஜன்னல்கள், நாற்காலிகள் மற்றும் மேசைகள் சரிசெய்ய, பாடசாலை கட்டிடங்களை பழுது பார்க்க என பல காரணங்களை கூறி மாணவர்களிடம் பணம் வசூலிக்கப்படுகின்றது. கல்விதுறையில் பணம் வசூலிக்கும் கல்விமான்களையே அரசாங்கம் உருவாக்கியுள்ளது. எனவே இது தொடர்பாக எமது அமைப்புக்கு 2 ஆயிரத்து 616 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது என்றார்.

# மத உரிமையான ஹலாலில் எவரும் தலையிட முடியாது! சம்பந்தன்



ஹலால் விவகாரம் தொடர்பில் எழுந்திருக்கும் சர்ச்சைகள் தொடர்பில் கடும் அதிருப்தியை வெளிப் படுத்தியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த விடயத்தில் அரசு ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கிறது. முஸ்லிம் மக்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்படி நிலைப்பாட்டை அதன் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் விளக்கினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஓர் இனத்தினுடைய, மதத்தினுடைய உரிமைகளில் எவரும் தலையிட முடியாது. அவர்களுடைய உரிமைகள் தொடர்பான முடிவுகளை எடுக்கக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு இருக்கவேண்டும். இன, மத ரீதியான முடிவுகள் சம்பந்தமாக ஏனைய மதத்தவர்கள் தமது கருத்தைத் திணிக்க முடியாது. தமது விருப்பு வெறுப்பின் அடிப்படையில் ஓர் இனம், ஒரு மதம் தீர்மானங்களை எடுக்கவேண்டுமென எவரும் கூறமுடியாது. அது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

ஹலால் என்பது மதத்தோடு சம்பந்தப்பட்டது. காலாதி காலம் அது நடைமுறையில் உள்ளது. அதனை மதிக்க வேண்டியது எமது கடமை. ஹலால் விடயத்தை முஸ்லிம் மக்கள், எவர் மீதும் திணித்ததில்லை. ஹலால் என்பது முஸ்லிம் மக்களைக் கட்டுப்படுத்தும் வழிநடத்தும் தனிப்பட்ட உரிமைகளைக் கொண்டது.

இந்த விடயத்தில் தேவையற்ற ஆர்ப்பாட்டங்கள், பிரசாரங்கள் செய்து தேவையற்ற நிலைமைகளை ஏற்படுத்துவதை ஏற்க முடியாது. நாட்டில் அனைத்து இன, மதங்களையும் அரசு ஒன்றாகக் கணிக்குமாயின் இந்த விதமான ஆர்ப்பாட்டங்களை, போராட்டங்களைத் தடுக்கும் வகையில் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு சட்டம், ஒழுங்கைப் பேணவேண்டும். அரசு இந்த விடயத்தில் தனது கடமையைச் சரிவரச் செய்யாமலிருப்பது தவறு என்றும் குறிப்பிட்டார் சம்பந்தன்.

இன, மத ரீதியான முடிவுகள் சம்பந்தமாக ஏனைய மதத்தவர்கள் தமது கருத்தைத் திணிக்க முடியாது. நாட்டில் அனைத்து இன, மதங்களையும் அரசு ஒன்றாகக் கணிக்குமாயின் இந்த விதமான ஆர்ப்பாட்டங்களை, போராட்டங்களைத் தடுக்கும் வகையில் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு சட்டம், ஒழுங்கைப் பேணவேண்டும். அரசு இந்த விடயத்தில் தனது கடமையைச் சரிவரச் செய்யாமலிருப்பது தவறு என்றும் குறிப்பிட்டார் சம்பந்தன்.

தகவல்: உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். தொடரில் இலங்கை வீரர்கள்: தமிழக அரசின் நிலை என்ன?

ஆசிய தடகளப் போட்டியை நடத்த முடியாது எனத் தமிழக அரசு அறிவித்த நிலையில், சென்னையில் நடக்கும் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்க முடியுமா என்று கேள்வி எழுந்துள்ளது.

விளையாட்டில் அரசியலைக் கலக்கக் கூடாது என்பது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுதான். ஆனால், ஒருநாட்டில் அளவுக்கு அதிகமான கொடுமைகள் நிகழும் போது சர்வதேச விளையாட்டு சமூகம் ஒதுக்கிவைக்கிறது. உதாரணமாக இன வெறி சர்ச்சை காரணமாக தென்னாபிரிக்கா சர்வதேச விளையாட்டு அரங்கில் இருந்து சிலகாலம் ஒதுக்கிவைக்கப்பட்டது.

இதனிடையே, வரும் ஆக்ஸ்ட் மாதம் சென்னையில் ஆசிய தடகள சாம்பியன்சிப் போட்டி நடக்க இருந்தது. இலங்கை வீரர்களும் இதில் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில் வரும் ஏப். 3ல் ஆறாவது ஐ.பி.எல். "டுவெண்டி - 20" தொடர் துவங்குகிறது. இதில் சென்னை, மும்பை, கல்கத்தா உட்பட 9 அணிகள் பங்கேற்கும். இந்த அணிகள் சென்னையில் தலா ஒரு போட்டியில் பங்கேற்கும். இதில் பஞ்சாப் தவிர மற்ற அணிகளில் மொத்தம் 13 இலங்கை வீரர்கள் உள்ளனர்.

இவர்களை, சென்னையில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்க தமிழக அரசு அனுமதி மறுக்குமா? அல்லது இவர்களை இலங்கை வீரர்கள் என்று பார்க்காமல், ஐ.பி.எல். அணிகளின் வீரர்கள் என்ற அடிப்படையில் அனுமதி அளிக்குமா என பொறுத்திருந்து பார்க்கலாம்.

குலசேகரா, தனஞ்செயா (சென்னை), ஜயவர்தன, ஜீவன் மெண்டிஸ் (டில்லி), சேனநாயக்க (கல்கத்தா), மலிங்க (மும்பை), மெத்யூஸ், அஜந்தமெண்டிஸ் (புனெ), பெரேரா (ராஜஸ்தான்), டில்ஷான், முரளிதரன் (பெங்களூர்), சங்கக்கார, திசரா பெரேரா (ஹைதராபாத்)ஆகியோரே பாதிக்கப்பட்டுள்ள இலங்கை வீரர்களாவர்.

# இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் பதவியிலிருந்து சரித் சேனநாயக்க நீக்கம்




இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க அப்பதவி யிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாக குழு இதற்கான முடிவை எடுத்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் தலைவர் உபாலி தர்மதாச, இலங்கை அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க அப்பதவி யிலிருந்து நீக்கப்பட்டமையை உறுதிசெய்தார். ஆனால் அவரது பதவிநீக்கம் குறித்த மேலதிக தகவல்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

சரித் சேனநாயக்காவின் இடத்திற்கு இலங்கையின் மற்றொரு முன்னாள் வீரரான மைக்கல் டி சொய்ஸா நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த உபாலி தர்மதாச எனினும் அந்தப் பதவியை ஏற்பது குறித்து அவர் இன்னமும் உறுதிப்படுத்தவில்லை எனவும் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக் கிரிக்கெட் மஹேல ஜயவர்த்தன ஊடகமொன்றிற்குப் பகிரங்கமாக எழுதிய கடிதத்தை வெளியிட மஹேலவிற்கு உதவிய காரணத்திற்காக மஹேலவோடு சேர்த்து விளக்கம் கோரப்பட்ட சரித் சேனநாயக்க அந்தக் காரணத்திற்காகவும் சில தனிப்பட்ட காரணங்களுக்காகவும் தான் பதவியிலிருந்து நீக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் அதிகாரியொருவர் சரித் சேனநாயக்க மீது குற்றச்சாட்டுக்கள் பலவும் காணப்படுவதாகவும் அவர் தனது பதவியை ஒழுங்காகச் செய்திருக்கவில்லை எனவும் வீரர்கள் அவர் குறித்துமுறையிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



# பார்சிலோனாவுக்காக 300வது கோலை அடித்தார் மெஸ்ஸி

உலகின் நட்சத்திர உதை பந்தாட்ட வீரரான ஆர்ஜன்டீனாவின் லியோனல் மெஸ்ஸி, பார்சிலோனா அணிக்காகத் தனது 300வது கோலை அடித்து சாதனை படைத்துள்ளார்.

ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸி முன்னாள் ஜாம்பவான் மாரடோனாவின் வாரிசாகக் கருதப்படுபவர். மாரடோனாவுக்கும் செல்லப் பிள்ளைதான் மெஸ்ஸி. மெஸ்ஸி, ஸ்பெயின் லீக் போட்டிகளில் பார்சிலோனா அணிக்காக ஆடி வருகிறார்.

பல வருடமாக இந்த அணிக்காக ஆடி வரும் மெஸ்ஸி, தற்போது பார்சிலோனா அணிக்காகத் தனது 300வதுகோலைப் போட்டு சாதனை படைத்துள்ளார். கிரெனடா அணிக்கு எதிரான போட்டியில் பார்சிலோனா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மெஸி 2004 ஆம் ஆண்டில் இருந்து பார்சிலோனா கழக அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரை 365 போட்டியில் விளையாடி 301 கோல்களை அடித்துள்ளார்.




# ஆபிரிக்க உதை பந்தாட்டப் போட்டியில் மூன்றாவது முறையாக நைஜீரியா சம்பியன்

ஆபிரிக்க நாடுகள் கலந்து கொண்ட உதை பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம், தென் ஆபிரிக்க தலைநகர் ஜொகனெஸ்பர்க்கில் நடைபெற்றது. இதில் இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்ற நைஜீரியா அணி, பாகினாபாசோ நாட்டைச் சந்தித்தது.

மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆட்டத்தில் நைஜீரியா 1-0 என்ற கோல் கணக்கில் பாகினாபாசோவை வென்றது. இந்த வெற்றியின் மூலம் நைஜீரியா மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட், ஒருநாள் அணித் தலைவராக மெத்தியூஸ், இருபதுக்கு20 அணித் தலைவராக சந்திமால்





இலங்கை கிரிக்கெட் அணியின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித் தலைவராக ஏஞ்சலோ மெத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளதோடு இவ்விரு போட்டிகளுக்கான அணியின் உபதலைவராக தினேஸ் சந்திமால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இருபதுக்கு 20 அணியின் தலைவராக தினேஸ் சந்திமால் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு உப தலைவராக லசித் மாலிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

"தெளிவு" மாத இதழைப் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். வேறு முகவர்கள் இதனை விற்பனை செய்ய விரும்பினால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். கவர்ச்சியான கழிவு தரப்படும்.

| | |
|---|---|
| Rizwies, | 114, Galle Rd., Wellawatte. |
| Poobalasingam Book Shop | Colombo 6 |
| New City Stores | Akurana. |
| Hira Book Shop & Communication, | Akurana. |
| City Book Shop, | Thelumbugahawatte Road Junction Akurana |
| Humairas | No. 3, Hill Street, Kandy. |
| Abdullah & Co. | Super Market, Nawalapitiya. |
| Nawshad Traders, | Main Street, Akkaraipatru. |
| People's Shopping Centre, | Main Street, Addalaichenai. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org